"ஒற்றுமை"

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."—திருக்குறள்.

புஸ்தகம் V
Vol. V

1925ஆம் ஜனவரிமீ

சஞ்சிகை 3
Issue 3

தோத்திரம்

யானேதும் பிறப்பஞ்சேன் ;
இறப்பதனுக் கென்கடவேன்?
வானேயும் பெறில், வேண்டேன் ; மண்ணுள்
வான் மதித்தும் இரேன் ;
தேனேயும் மலர்க் கொன்றைச் சிவனே !
எம்பெருமான் ! எம்
மானே ! உன் அருள் பெறுநாள் என்
றென்றே வருந்துவனே.

மணிவாசகர்.

ஒற்றுமையை எப்படி வளர்ப்பது?

நம் நாட்டில் ஒற்றுமையைப் பலப்படுத்தவோ அல்லது சிதையாமலிருக்கச் செய்யவோ பல வழிகள் உள. அவைகளுள் கூட்டு விவசாயமோ அல்லது வியாபாரமோ ஒன்று. கண்டு கூட்டு வியாபாரமென்பது என்ன என்ற விஷயத்தையும் அதனால் விளையும் நன்மைகளைப் பற்றியும் ஆராய்வோம்.

ஒரு கிராமத்தை யெடுத்துக் கொள்ளுங்கள். அக் கிராமத்தில் நூறு பேரிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ஒவ்வொருவரும் ஒரு கடைக்குப்போய் உடுக்க உடை வாங்குகிறார்கள். நபர் ஒன்றுக்கு ஐந்து கஜ மல் விதம் வாங்கினால் ஐந்நூறு கஜ மல் கடைக்காரனுக்குச் செலவாகிறது. ஒவ்வொரு கஜத்திலும் ஒரு பைசா லாபம வைத்தாலும் ஐந்நூறு பைசா லாபமடைகிறான் கடைக்காரன். அவன் அத்துணியைச் செய்தவனுமல்லன் குறைந்த விலை கொடுத்து வாங்கி அதிக விலையில் விற்கும் ஒரு தாகன். ஆனால் நூறு பேரும் சேர்ந்து துணி நெய்கிறவனிடத்திலே நேரே வாங்கும் பக்ஷத்தில் ஐந்நூறு பைசாவை அவர்களே அடைவார்கள்.

அதே மாதிரி கிராம வாசிகளிடத்திலிருக்கும் நெல்லை ஒரு தாகன் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விலையாகப் பேசி ஒவ்வொரு அளவாக அளந்து நெல்லை வண்டிகளில் ஏற்றி பெரிய வியாபாரியிடம் கொண்டு சேர்த்து தனக்குண்டான தாகு, லாபம், செலவு முதலியவைகளைப்

பெறுகிறான். எல்லாரும் ஒன்று சேர்ந்து அந்தப் பெரிய வியாபாரியிடத்தில் நெல்லை விற்கும் பட்சத்தில் மொத்தமாய் ஒரே இடத்தில் வாங்குவது சௌகரியமும் லாபமும் இருக்கிறதென்று அதிகக் கிரயம் கொடுத்து சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்ளுவான்.

ஆகவே, கூட்டு வியாபாரத்தினால் ஏற்படும் நன்மை வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. இப்பொழுது கூட்டு வியாபாரத்தின் ஒரு பகுதியாகிய கூட்டுற விற்பனையை யெடுத்துக் கொள்ளுவோம். கூட்டுற விற்பனையென்றால் நமக்குத் தேவையுள்ள சாமான்களை மொத்தமாக வாங்கி சில்லறையாக விற்பது. நூறு நபர்களும் ஒன்று சேர்ந்து நபர் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் சேகரித்து சேர்ந்த ஐந்நூறு ரூபாயை முதலாக வைத்துக்கொண்டு ஒரு கடையை ஆரம்பித்து நூறு நபர்களுக்கும் தேவையாயுள்ள சாமான்களை சகாயமாய்க் கிடைக்கக்கூடிய காலத்திலும் இடத்திலும் வாங்கி ஒருமிக்கச் சேர்த்து வைத்துக் கொண்டு பின்பு சில்லறையாக அவர்களுக்கு வேண்டிய போது விற்கவேண்டும். சாமான்களை மொத்தமாக வாங்குவதனால் குறைந்த விலையில் வாங்கலாம். சாமான்கள் விளையுமிடத்திலே வாங்குவதனால் நயமானதாய் வாங்கலாம். நிறையும் அளவும் சரியாக விருக்கும்.

இவ்விதமாக கிராம வாசிகள் கொடுப்பதிலும் கொள்ளுவதிலும் ஒன்றுபட்டு இருப்பார்களானால் அவர் லாபத்தை யடைவதோடு ஐக்கிய இயக்கத்தில் ஊக்கமுடையவராய் இருந்து நாளடைவில் ஒற்றுமையைப் பலப்படுத்துவார்கள் என்பது திண்ணம்.

பத்திரிகாசிரியர்.

மலச் சிக்கல்

ஜீரணக் கருவிகள் அயர்ந்து விடுவதால்தான் மலச் சிக்கல் ஏற்படுகிறது. நாகரிகமும் சுகவாழ்வும் மிகுந்துள்ள இக்காலத்தில் இந்த வியாதி சர்வ சாதாரணமாக இருக்கிறது. இந்த மலச் சிக்கலைப்போல் சரீரத்தில் பல வியாதிகளை உண்டுபண்ணக்கூடியது வேறொன்றில்லை.

நீங்கள் மிகவும் புஷ்டி தரத்தக்க ஆகாரத்தைப் புசிக்கலாம். ஆனால் ஜீரணக் கருவிகள் சரியாக அந்த ஆகாரத்தைக் கையாடாவிட்டால் அது விஷத்தன்மையை அடைந்து விடுகிறது. ஆகவே, சுகமாக இருந்து வரவேண்டுமானால் ஜீரணக் கருவி சரியாக வேலை செய்யும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஜீரணக் கருவிகள் சரியாகவாவது, பூரணமாகவாவது வேலை செய்யாதிருத்தல், அடி வயிறு பெருத்தல், மிகுந்த கஷ்டத்துடன் மலம் வெளிப்படுதல், மூத்திரபிண்டம் ஓய்வுற்று விடுதல், தோல் வறட்சையடைந்து முறடாகி விடுதல், சுவாஸம் துர்க்கந்தம் வீசுதல், நாவில் அசடுபடிதல், மனதில் அயர்வு ஏற்படுதல், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, அற்ப ஜுரம் இவைகள் மலச்சிக்கலின் சில அறிகுறிகளாகும்.

காரணங்கள் :—நாம் சுறுசுறுப்பாக இராமலிருப்பதே மலச் சிக்கலுக்கு முக்கிய காரணம். நாம் சுறுசுறுப்பாக இராததால் ரத்த ஓட்டத்தின் வேகமும் தணிகிறது. அதன் பலனாக சரீரத்திற்கு புஷ்டியை ஊட்டும் மார்க்கத்

தின் வேலையும் ஓய்வு படுகிறது. மாமிசத்தையாவது, காரவஸ்துக்களையாவது, தேத் தண்ணீர், காப்பி, புகையிலை, சாராயம் இவைகளையாவது அதிகமாக உட்கொண்டாலும் மலச் சிக்கல் ஏற்படும். அடிக்கடி பேதிக்கு சாப்பிடுவதாலும், எனிமா வைத்துக்கொள்ளுவதாலும் ஜீரணக் கருவிகளின் ஓய்வு அதிகரிக்கும். மனக்கவலையினாலும் மலச் சிக்கல் ஏற்படும்.

வைத்தியம் :—இந்த வியாதியை நிவர்த்தி செய்து கொள்ளப் பல வழிகளிருக்கின்றன. ஆனால் சரியான ஆகாரத்தை உட்கொண்டு. சரீரத்தைக் கட்டுடையதாகச்செய்து கொள்ளுவதுதான் எல்லாவற்றிலும் சிறந்த பரிகாரமார்க்கமாகும். பேதி மாத்திரைகளை உபயோகிப்பது வழக்கமாக இருந்தால் அதை முதலில் விட்டுவிடவேண்டும். தற்கால சாந்தியாக இந்த மாத்திரைகள் இருக்கலாம். ஆனால் ஜீரணக் கருவிகளின் சக்தி நாளடைவில் இதனால் குறைந்துவிடும். இந்த விஷத்தைச் சேர்த்துப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டால் நாளடைவில் அதிகப்படியான மாத்திரைகளை உபயோகிக்கவேண்டிய அவசியமேற்படும். ஜீரணக் கருவிகளும் அதன் பலனாக உணர்ச்சியற்றுப் போய்விடும். ஜீரணக் கருவிகள் ஒழுங்காக வேலை செய்து வரும்படி செய்யவேண்டியதுதான் நமது நோக்கம். அவசியமாயிருந்தாலொழிய செயற்கைப் பொருளினால் அந்த நிலைமையை உண்டுபண்ணிக் கொள்ளக்கூடாது.

ஜீரணக் கருவிகள் சரியாக வேலை செய்ய வேண்டுமானால் அடிவயிற்று நரம்புகளுக்கு அதிக வேலை ஏற்படக் கூடிய வேலைகளைச் செய்யவேண்டும். மலச் சிக்கலால் கஷ்

டப்படுகிறவர்கள் அதிக மாமிசத்தையாவது, தேயிலை, காப்பி முதலிய பானங்களையாவது உபயோகிக்கக்கூடாது. பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும் இளக்கிவிடக்கூடிய சக்தி அதிகமாகவிருப்பதால் அவைகளை அபரிமிதமாக உபயோகிக்கவேண்டும். மலச் சிக்கல் ஏற்படக்கூடியவர்கள் பாலை நிறுத்தவேண்டும். ஆகார காலங்களுக்கிடையில் ஏராளமாக சுத்தநீரைப் பருகவேண்டும். படுக்கைக்குச் செல்லுமுன் ஒரு கோப்பை ஜலத்தைச் சாப்பிடுதல் உத்தமம்.

மலபாதையை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்கிற உணர்ச்சி ஏற்பட்டால் அலக்ஷியமாக இருக்கக் கூடாது. புடவை அல்லது வேஷ்டியை அடிவயிற்றில் பிடிப்பாகக் கட்டிக் கொள்ளக்கூடாது. குறைந்தது 7 மணி முதல் 9 மணி நேரம் வரை தூங்கவேண்டும். காலையிலெழுந்ததும் சாத்தியமானால் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். மனக்கவலையை ஒழித்து, பிராணுயாமம் செய்ய வேண்டும். (ஆ. தீ.)

பழந்தமிழ்ப் பெருமக்கள் வரலாறு-2.

அரசியற் புலவர்—கோவூர் கிழார்

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வளவு சிறப்புவாய்ந்த நகரங்களைத் தன்னுளடக்கிய சோழ நாட்டையாண்ட கரிகாற்பெருவளத்தான் என்னுஞ் சக்கரவர்த்திக்குப் பின்னாண்டவர்களில் ஒருவனான நலங்கிள்ளி காலத்து நமது புலவர் இருந்தவராவர். இவர் எங்கே கல்வி பயின்றாரென்றும், யாரிடத்துப் பயின்றாரென்றும் இப்பொழுது அறிந்து சொல்வது அரிய காரியமாயிருக்கின்றது. அந்நாளி

விருந்த அரசர்கள் பொது இல்லங்கள் ஏற்படுத்தி அவைகளில் உணவளித்துக் கல்வி பயிற்றி வந்தார்கள் என்று தெரிவதால் அவைகளிலொன்றில் இவர் கல்வி பயின்றிருக்கவேண்டு மென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பொது இல்லங்களுண்டு என்பதற்குற்ற சான்றுக்களில் புறநானூறு என்னுந் தொகைநூலினுள்ள 34,325-ம் பாடல்களைக் கூறலாம். அவற்றுள் 34-ம் பாடலில் புல்லிய நிலத்து வாகினது அரிசியைப் பாலின் கட்பெய்து சமைக்கப்பட்ட சோற்றைத் தேனொடு கலந்து உண்டு சிறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத் தின்ற என் சுற்றத்தோடுகூட இலந்தை மரமோங்கிய வகன்ற இடத்தையுடைய பொதியிற்கண் ஒன்றனையும் மறைத்தலில்லாத உள்ளத்துடனே வேண்டிய வார்த்தைகளைப் பலகாலுங் கூறி, பெரிய கட்டியாகிய கொழுவிய சோற்றை அருந்திய பாணர்க்கு நீங்காத செல்வமெல்லாவற்றையுஞ் செய்தோன் எம்முடைய வேந்தனாகிய வளவன்; அவன் வாழ்வானாக வென்று பாடேனாயின் வாழ்நாட்கு அலகாகிய (அளவு) கதிர்ச் செல்வன் (சூரியன்) தோன்றுதலறியான் என்று தனது செய்நன்றி மறவாமையைக் காட்டுவதோடு தான் காப்பாற்றப்பட்டுக் கல்வி பயிற்றப் பட்டமையுஞ் சுட்டுகின்றார் இக்கோவூர் கிழாரது உடன் காலத்துப் புலவரொருவர். இவருடன் இருந்த மற்றொரு புலவரான உறையூர் முதுகண்ணன் சாத்தனர் என்பார் தம்மூர் எது வென்றார்க்கு விடையாக "மதுகை மன்றத்திலங்குபடு யிரத்தியலங்குபடு நீழற் கயந்தலைச்சிறாஅர் கணைவிளையாடும் அருமுனை யிருக்கையதுவே" என்று கூறுகிறார். இவைகளினால் இக்காலத்தில் விடுதியோடு கூடிய கலாசாலைகள் (Boarding schools) என்று சொல்லப்படுவன அக்காலத்திலுமிருந்தன வென்றறியலாம்.

மேலே கூறிய ஊர் நாகப்பட்டினம் தாலுக்காவிலுள்ள கீழ் வேளூர் என்று கூறுவர் ஒரு சாரார். அதற்கு அவர்கள் கூறும் ஆதாரம் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் கடவுளர்க்கு இலந்தைவன நாதரென்றும் இவ்வூரில் ஒரு பொது மன்றம் இருந்து, அதில் கல்வி பயிற்றப்பட்டதென்பதற்கு தேவாரத்தில் ஆதாரமுமுண்டென்றும் கூறுவர். மற்றொரு சாரார் அப்படி யொன்றுமில்லையென்றும், 'முன்றில்' என்பதுபோல பொதுவில் என்பது பலரும் கூடும் ஒருமரத்தடி போன்றது மென்பர். பின்னையவர்கள் கூற்றுக்கு இவர்களது பெருமைவாய்ந்த உரையேயன்றிச் சான்றொன்று மில்லை. சான்றையுடைய முன்னவரது கொள்கையே வலியுடையதாக விருக்கின்றது. எவ்வாறாயினும் நமது புலவர் சோழ அரசர்களது உதவிபெற்றுக் கல்வி பயின்றவர் என்பது மாத்திரம் திட்டமாகக் கூறலாம்.

இவரது இயற்பெயர் இன்னதென்று விளங்கவில்லை. கிழார் என்ற பட்டம் காணப்படுவதாலே இவர் ஒரு தலைமைசான்ற குடியினர் என்று மாத்திரம் சொல்வதற் கமையும். கிழார் என்பதற்கு உரிமை யுடையார் என்பது பொருள். கோவூருக்கு உரிமையுடையார் என்று பொருள்படுகிறது. கிழார் என்ற பட்டம் பிற்காலத்தாண்ட சோழ மன்னர் நாளிலும் பயின்று வந்திருக்கின்றது. இந்தக் கோவூர் என்ற பேருடைய ஊர்கள் பல காணப்படினும் கோகூர் என்ற பேருடன் கீழ்வேளூருக்குச் சமீபத்திலும் ஒன்றுண்டு. இவர் சோழநாட்டினர் என்று கூறுவதாலும் 'இரத்தி நீடிய அகன்றலை மன்றத்து' என்பதாலும் இக்கோகூரே கோவூரென்ற பேரோடு இருந்திருக்க வேண்டுமெனக் கூறுவது பொருந்தும்.

இவரது காலம் கடைச்சங்க காலமாகும். இவர் காலத்தைக் குறிப்பதற்குப் பலவாதாரங்கள் தென்படுகின்றன. சங்கப் புல

வர்களான கபிலபரணரோடு சேர்ந்தவராக எண்ணப்பட்டிருக் கிறது. பொய்யாமொழியான திருக்குறளுக்குச் சாற்றுக் கவி பாடியுள்ளார். கரிகாலனுக்குப் பின் வந்த நலங்கிள்ளி, கிள்ளிவளவன் என்ற இருபேரரசர்களையும் பாடியுள்ளார். இவ் வரசர்கள் கடைச்சங்கத்திறுதிக் காலத்தினர் என்று முடிவு கட் டப்பட்டிருக்கிறது. ஆகவே இவரும் கடைச்சங்கத்திறுதிக் காலத்தினர் என்றும், சோழ நாட்டினரென்றும், சோழ நாட்டி லுள்ள ஒரு பொது மன்றத்திற் கல்வி பயிற்றப்பட்டவரென் றும் ஏற்படுகிறது.

II

இவரது ராஜதந்திரம்

உலகில் மக்களுள் ஒருவரை யொருவர் அடக்கியாளவேண்டு மென்னு மெண்ணம் உதிப்பதுபோலவே அரசர்களுள்ளும், தாயத்தார்களுள்ளும் ஒருவருக்கு மற்றவரை யடக்கியாள வேண்டுமென்ற எண்ணமும் அவாவும் மிகுதியுமுண்டாவது இயற்கை. இது முக்காலத்து முள்ளவொரு செய்தியாகும்.

முதற்பகுதியில் அக்காலத்திலே சோழநாட்டை அரசாண் டவன் சோழன் நலங்கிள்ளி என்று கூறப்பட்டிருக்கிறது. இவ் வரசன்மிக்க வீரமும் கொடையுமுடையவன். கல்விகேள்விகளிற் சிறந்தவன். அந்நாளில் இவனோடு ஒத்த பண்புடையரான சில பல தாயாத்தா ரிருந்தன ரென்று பழந்தமிழ் நூல்களினால் அறிகி றோம். அத்தாயத்தார்களில் நெடுங்கிள்ளி என்ற பேருடை யானொருவனிருந்தான். இவன்மன்னவன் வழிநின்று சிலவூர்களை ஆண்டுவந்தனன். இவ்வாறு ஆண்டு வருகையில் வஞ்சனையாலோ, இறுமாப்பாலோ, வேறு யாது காரணத்தைக்கொண்டோ தனது

பேரரசனைப்புறக்கணித்து வந்தான். இதனை அறிந்த பேரரசனான
நலங்கிள்ளி தனது சேனையோடு சென்று அவனை ஆவூர் என்னுமி
டத்திலுள்ள கோட்டைக்குள் அடைத்து முற்றுகையிட்டான்.
அவன் முற்றுகை யிட்டமாத்திரத்திலே வெளியிலேயுள்ளவர்கள்
வெளியிலும், கோட்டையிலிருந்தவர்கள் கோட்டைக்குள்ளுமிருக்
கும்படியாகிவிட்டது. முற்றுகையிடப்பட்டவர்கள் படுந்துன்பத்
தையும் பட்ட துன்பத்தையும் நாம் சமாசாரப் பத்திரிகைகள் மூல
மாகப் படித்தறிந்தவற்றை மறந்துவிடக்காலமாகவில்லை. அதை
விட எத்தனையோ மடங்கு முன்னாளிற் றுன்புற்றிருக்கவேண்டு
மென நாமே கற்பனை செய்துகொள்ளலாம். ஆயினும் இவ்
ஆவூர் பட்டபாட்டை நமது புலவரான கோவூர் கிழார் வெகு அழ
காகக் கூறியிருக்கின்றார். அவர் "கரியபெண்யானைகளினது
தொகுதியோடு பெரிய கயத்தின் கட்படியாவாய், நெல்லை யுடைய
கவளத்துடனே நெய்யால் மிதித்துத்திரட்டப்பட்ட கவளமும்
பெற, வாய்திருந்திய மருங்கையுடைய வலிய கம்பம் வருந்தச்
சாய்த்து நிலத்தின்மேலே புரளுகின்ற கைகளை யுடையவாய்க்
கொடியவாகப் பெருமூச்சுவிட்டுச் சுழலுகின்ற யானை இடிபோல
முழங்கவும், பால் அகப்படாமையினாலே பச்சிளங் குழந்தைகள்
அழவும், மகளிர் பூச்சூடி அழகுபொலிந்து விளங்கியவர் இந்நாள்
தலைக்கு எண்ணெ யிட்டு வாரிப்பின்னிப் பூ வைத்துக்கொள்ள
முடியாமல் தங்குழலை முடிக்கவும் நல்லமனை யிடத்துள்ளார்
நீரில்லாமல் வருந்திக் கத்தவும் இவ்வாறு பலவிதமான துன்பங்
களை யனுபவிக்கின்றனர்" என்று கூறியுள்ளார். இதோடு நில்லாது
இவர், அடைபட்டிருந்தவனான நெடுங்கிள்ளியை விளித்து நீ அற
த்தையுடையவனாயின்; தர்மவழியில் நிற்பவனாயின்; இந்நாடு
நினதன்றோவென்று சொல்லிக் கோட்டைவாயிற் கதவைத் திறத்
தல் செய்வாயாக; அன்றி மறத்தையுடையையாயின், பலமுடை

யவனென்றெண்ணுவையாகில், மனதிலும் தைரியமுடையவனு யின் முற்றுகையிட்டு வெளியில் நிற்கும் உனது பகைவனை எதிர்த்துப் போரில் வென்று கதவினைத்திறந்தல் செய்வாயாக; அவ்வாறு இரண்டு மின்றி நீ கோட்டைக்குள் ஒரு பக்கத்திலிருத்தல் நாணுத் தகைத்து என்று அவனை இடித்துரைத்தனர்.* இவ்வாறு இடித்துரைக்கப்பட்ட நெடுங்கிள்ளி கோட்டை வாயிற் கதவினைத் திறந்து தனது தலைவனுக்குக் கீழ்ப்படிந்தனன்.

பின்னொருக்கால் இந்நெடுங்கிள்ளி பெரும்படையும் உறையூரிற் புகுந்துகொண்டு வலியுடையனாயிருந்தபோது, மறுபடியும் இக்கோவூர் கிழார் உறையூரை முற்றியிருந்த சோழன் நலங்கிள்ளியை நோக்கி, வேந்தே! நின்னோடு மாறுபட்டவன் பெரிய பனையினது வெளிய தோட்டைச் சூடியவனாகிய சேரனல்லன்; கரிய கிளைகளையுடைய வேம்பினுடைய மாலையை யணிந்த பாண்டியனல்லன். நின்னுடைய கண்ணியும் ஆத்தியினாற் கட்டப்பட்டது; நின்னுடன் போர் பொருவானுடைய கண்ணியும் ஆத்தியினாற் கட்டப்பட்டது. ஆகலால் நம்முள் ஒருவர் தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் உலகவியல்புமன்று; ஆதலால் நுங்குடிக்குத் தக்கதொன்றன்று நுஞ்செய்கை. அன்றி வேற்றுப் புலவரசர்கள் இச்செய்தியைக் கேட்பாராயின் நும்மை யிகழ்வர். ஆகையால் இப்போரைத் தவிர்வீர்களாகவென்று சொல்லிப் போரை விலக்கினர். ஆயினுமென்ன? நெடுங்கிள்ளி 'தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்ற பிடிவாத முடையவனாயிருந்தமையின் மற்றொரு சமயத்தில் காரியாறு என்ற இடத்தில் கோப்பெருஞ்சோழனோடு பகைத்துப் பொருது உயிரிழந்தனன். இது எவ்வாறாயினும் நமது புலவர் வெகு ஆண்மையோடு அவ்வரசர்

* புறநானூறு.

கட்டு இழுத்துவாராது, அச்சமயத்தில் தான் எடுத்துக்கொண்ட கருமத்தை நிறைவேற்றி நாட்டில் கலக்கமின்றி நலத்தோடு வாழச்செய்தனர் என்பதே ஈண்டு கவனித்தற்குரியது.

" அறிகொன்றறியா னெனினு முறுதி
உழையிருந்தவன் கூறல் கடன்.

என்பது திருவள்ளுவர். தன் கடமை இன்னதென் றோர்ந்தபடி இப்புலவர் பெருந்தகை நடந்துகொண்டு நின்றுவிட வில்லை. தான் எவரெவருடன் நட்புக்கொண்டனரோ அவர்களை யெல்லாம் தன்வழி இழுத்துக்கொண்டனர் என்பது நோக்கத் தக்கது.

இந் நெடுங்கிள்ளியே ஒருகால் தான் உறையூரிலிருந்த காலத்தே வந்த புலவராகிய தித்தன்* மகன் இளந்தித்தனைப் பகைவர் விடுக்கும் ஒரு புலவனென்று தேறமாட்டாது நம் பகைக் கெடுக்க வந்த ஒற்றனே என்றையுற்றுக் கொல்லப்புக்குழி, இதனைக் கேட்ட கோவூர்கிழார் ஆண்டு விரைந்துசென்று இந் நெடுங்கிள்ளியை நோக்கி ஐய! அரசே!! இவன் யாரென்று நினைத்தனை!!! பழம் எவ்விடத்தாப் பழுக்கினும் அங்குச் செல்வது அரிதென எண்ணாது பறந்து செல்லும் பறவைகளை யொப்ப வருவதாயிருக்கின்றனர்; சுரம் நெடியவென்றும், வழி அரியவென்றும் கருதாது நடந்து திருந்தாத நாவால் தாம் வல்ல பாடி, ஆண்டுப் பெற்ற பரிசிலான் தம் சுற்றத்தோடு உண்டு மகிழும் பாணன் மகன் இவன்!!! பிறர்க்குச்செய்யும் கொடுமை யறிந்ததோவெனின்; இல்லை! ஆயினும் கல்வி கற்றோரு மென்னும

* தத்தன் என்று நூல்களிற் குறிக்கப்பட்டிருப்பினும் தித்த னென்றே பாக்களில் காணப்படுவது கொண்டு அப்படியே கொள்ளப்பட்டது.

இரமையால் பகைவர் எப்பொழுதுவரும் என்றஞ்சித் தலைசாய்ந்து நிற்போரைப் போலல்லாது நிமிர்ந்து நடக்கும். ஆகையால் இவனை நீ ஒற்றனென்று கருதாயாக வென்று கூறி விடுவித்தார். இப்பொருள் பொருந்தியசெய்யுளிலே இப்புலவன்புலவனாயினும் புலமை நிரம்பப் பெறாதவனாகையால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான தகுதியின்மையைச் சுட்ட வடியா நாவினன் என்ற ஒரு சொல்லால் பெரும்பொருள் தொனிக்கக் கூறினர். அன்றியும் அரசனைப் பார்த்து நீ பெரியோனல்லை, நலங்கிள்ளிக்கு அஞ்சியே என்றும் வாழ்பவனாயினை. இது நினக்குத் தக்கதொன்றன்று என்று இடித்துரைக்க, நண்ணார் நாண அண்ணாந் தேகி என ஒரு அடியைவைத்தார். தமது கல்வித் திறம் இவைகளுள் விளங்குவதோடு பெரியோனாயினும் சிறியோனாயினுமென்? கோவுங் குடியும் தனக்குச் சமம் என்று காணுந் தகைமையுடையார்.

இவ்வொரு இரு அரசரோடு நம் புலவர் நட்புரிமை பூண்டவரன்று. இவர்களுக்குப் பின்னேயும் அரசாண்டு குளமுற்றம் என்ற இடத்தில் இறந்துபட்டவன் கிள்ளிவளவன் என்னும் அரசன். இவ்அரசனுக்கு இவன் நாட்டில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களி லொருவனாகிய மலையன் மரபிலுள்ள ஒருவன் அடங்கி நடந்திலன். அவன் கிள்ளிவளவனுக்கு எதிரியாயிருந்த அவனது தாயத்தாரொருவனுக்குச் சகாயமாக நின்று போர் புரிந்தான்; அவ்வாறு நடந்த போரில் அவர்களை வென்று அக்கால வழக்குப்படி அவர் மக்களைப் பிடித்து வந்து அரசன் முன்னிறுத்தினர். அவன் அவர்களை யானையின் காலிற் கொடுத்து இடறும்படி சொல்லியபோது கேட்டிருந்த நமது புலவர் பெருமான் அரசனை நோக்கி, வேந்தே! அது நினக்குத் தகாது!! நீயோ அல்லலுற்றுத் தஞ்சமடைந்த புறவின் துன்பத்

னுக்கு நிற்க ஒரு பெருஞ் சோழனை சிபிச்சக்கரவர்த்தி யுடைய மரபில் வந்தாய்; இப்பிள்ளைகளோ தம் அறிவால் உழுதுண்ணும் பாங்கான புலவர் பலரொடு பகுத்துண்ணும் மன்னரின் மரபினுள்ளார். அன்றியும், இவர்கள் யானையைக் கண்ட மாத்திரத்தே தாம் முன்னர் வெருவி அழுத அழுகையை மறந்து, தாங்கு வரும் அரங்கையும் நினையாது வேடிக்கை பார்க்கின்ற தன்மையையுடையார்; இது மாத்திரமோ? நினது மன்றத்தைப் பார்த்து வெருவியழுகின்றனர். ஆகையால் நீ இவர் நிலை பார்க்கிடுதல் கருதியுடையையோ! அங்ஙனஞ் செய்யற்க என்று சொல்லித் தெளிவித்தார்.

'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்'

என்ற திருவாக்கிற்கோர் பெரு இலக்காய் நிற்கின்றார் காண்மின்!

இத்தன்மைத்தோ? பின்னுமொருகால், கிள்ளிவளவன் கருவூர் என்னுமிடத்தே மாற்றரசனை முற்றுகையிட்டு அவன் சேனைகளைச் சின்னபின்னமாக்கி அங்கேயே தன் பாளையமிறங்கியிருந்தான். வெகு காலமாயும் போர் முடிவுறாததைக் கண்ட அந்தப் புலவர் பெருமான் அரசனைக் கண்டு கொற்றவேந்தே! இப்போரில் நிற்கட்டும் நான் அருந்தவறுதலைக் கண்டதில்லை; இது போதியது. போரை நிறுத்தி எழுவாயாக என்று அரசனுக்குக் கூறினர்.

இப்பேய்கள் பிணங்களைப் புண்பட்ட ஒரு புலவர் பேய்கள் தம்மை நோக்கிக் கொன்று சொல்வதாக, வெப்பக் குருதிப் போரில் மயங்கிக் கண்ணீர் வெழுத்தின் குப்பங்களிலே முகந்தெடுத்து வைத்துக்கொள்ளீர் என்றும்; சோர்கின்ற களிற்றின் காலதி

யாற் சூழ அலகிட்டு அலை குருதிநீரும் தெளித்துக் கலம் வைக்க நிலமுஞ் சமைத்துக்கொள்ளீரென்றும், அழிந்தவர் பொற் பரிசையவை பொற்கலமாகக் கொள்ளீரென்றும்; விழுந்த தவளக்குடை மின்னும் வெள்ளிக் கலமாகக் கொள்ளீரென்றும், நிலத்தைச் சமைத்துக் கொண்மீரேல், நெடுங்கைக்களிற்றின் பனைக்காலாங் கலங்களைக்கொள்ளீரென்றும்வைத்துவர்ணிக்கின்றார். பின்னர் முன்னொருநாள் நடந்த பெரும்போரில் பேய்களுக்குப் படைத்த படைப்பேய்களைக் கூவி அவதியில்லாச் சுவைக் கூழ் கண்டு அங்காந் தங்காந்து அடிக்கடியும் 'பவதிபிட்சாந் தேகி' எனும் பனவ*ப்பேய்க்கு வாரீர் என்றும், உயிரைக் கொல்லாச் சமணப்பேய்களுக்கு மயிரைப் பார்த்து வடித்துப் போத வாரீர் என்றும், முழுத்தோல் போர்க்கும் புத்தப்பேய்க்கு மூளைக் கூழை மணந்திரிபாக்கஞ்சியாக வாரீரென்றும், இறைச்சி உறுப்பனைத்துங் கொள்ளுங்கூழை வெள்ளாட்டின் பைத† இறைச்சி தின்றுலர்ந்த பாரப்பேய்க்கு வாரீரென்றும், குருட்டுப் பேயின் கையில் கஞ்சி வாரீர் என்றும், பையாப்போடு பசிகாட்டிப் பதலை‡ நிறைந்த கூழ்காட்டிக் கையாற் பேசும் ஊமைப் பேய்க் கலத்தை நிறையுமென்றும், பசியால் காதடைத்த எனக்கு வாருமென்று நடைவாயைத் துடைத்து நக்கிச் சுழல்கின்ற கூர்ப்பேய்க்கு நிறையவாருமென்றும், விழுதைப்பேய்க்கும், நோக்கப்பேய்க்கும், கூழெல்லாம் தானே பருகி தன் கணவன் குடியா னென்னக் குறுங்கடிக்குங் கூத்திப்பேய்க்கும், ஊர்க் கட் பேய்க்கும், இணக்கமில்லா நமையெல்லாம் எண்ணிச் சரிவரக் கண்டேமென்றும் கணக்கப் பேய்க்கும் மனங் களிக்க வார்க்கும்படி சொல்லுகிறது. இனி இவைகளுண்ணும் அழகைப்பாருங்கள்; மென்குடர் வெள்ளை குதட்டுவர்; மெல்விரல்

* பார்ப்பனப்பேய் † உலர்ந்த ‡ குண்டான் (பாத்திரம்)

அஞ்சியதுக்கிர்; முன்கையெலும்பினை மெல்லிர்; மூளையை வாரி விழுங்கிர்; அள்ளியருகிருந்தாண்டனிர்; அடியசைந்தசைந்தாண்டனிர்; அற்றமறிந்திருந்தாண்டனிர் என்று உபசரிக்கின்றன. இவ்வாறு பேயுண்ணும்படி பல படைகளை வீழ்த்துத் தள்ளியதே போதுமென்று கூறிக் கிள்ளிவளவனை அம்முற்றுகையினின்றும் தன்னூர் செல்லும்படி செய்தார்.

இவ்வாறாக ஒன்றல்ல, இரண்டல்ல பல தடவைகளிலும் அரசரை நல்வழியில் நடக்கச் செய்து அவர்கட்குப் பெருங்கீர்த்தியும் பெரும் சிறப்புமுண்டாகும்படிச் செய்தனர். இவரைப் போன்ற கல்விவல்லாரொருவர் ராஜதந்திரத்தில் புகுந்து உழைத்தவர்களைக் கேட்டிருக்க மாட்டோம். ராஜதந்திரிகள் அநேகருண்டு என்பதுண்மையே யாயினும் அவர்கள் அத்துறையிலேயே உழைத்து நாளடைவில் பெரியோரென்றும் நிபுணர் என்றும் பேர் பெற்றிருக்கலாம். இவ்வாறு கல்வியினும் மேம்பட்டு அருஞ்செய்கை யுடையாரைக் காண்பதரிது. இவருடைய அருஞ் செயல்களால் பல அரசர்களையும், வேள்களையும் நண்பர்களாகக் கொண்டிருந்தனர். அவர்களுள் சோழ நாட்டின்கண் சிறுகுடிகிழான் பண்ணன் என்பாருமொருவர். இவன் இப்புலவர் பெருந்தகையைப் போலவே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்று புகழ்படுகிறான். இதுவே இவர்களை நட்பாளராகச் செய்ததுபோலும்.

(தொடரும்)

இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர்.

ஆரிய அரசரும் தமிழ் அரசரும்

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பால் இமயமலையில் கல்லெடுத்து அக்கல்லை கனகவிசயர் தம் முடிமேலேற்றி வஞ்சிமா நகரத்திற்கு சேரன் கொண்டுவந்தான். ஆகவே சேர அரசனுக்கும் ஆரிய அரசருக்கும் நிகழ்ந்த போர் அக்காலத்தில் தமிழருக்கும் ஆரியருக்கும் நிகழ்ந்த போரென்றே கருத இடமிருக்கின்றது.

இப்போர் முடிந்த பின்னர் செங்குட்டுவனைக் காண வந்த மாடலன் என்னும் மறையவன் சிலப்பதிகாரக் கதை முழுதையும் சுருக்கி அரசே! மாதவி மடந்தை கானல் வரிப் பாட்டுகனகர் விசயர் தம்முடித்தலை நெரித்தது என்று அழகாகக் கூறினன். அதனை விளங்கச் சொல்லும்படி சேரன் கேட்க மாடலன் கூறுகின்றான். அரசே! மாதவி கடற்கரையிலிருந்து பாடிய கானல் வரிப் பாட்டால் கோவலன் பிணங்கிப் பிரிந்தான். தன் குலக்கொடியாகிய கண்ணகியைச் சேர்ந்தான். அவளுடன் மாடமூதூர் மதுரை புகுந்தான். அங்கு கொலைக்களப்பட்டான். அவன் மனைவி நின் நாடு புகுந்து வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள் என்று கதையைக் கூறி முடித்தான்.

இவ்வாறு சேரன் ஆரிய மன்னருடன் போர் செய்து வெற்றி பெற்றதைக் கேட்ட மற்றைய தமிழ் வேந்தரிருவரும் ஒரு வகையில் இன்பமும், ஒருவகையில் துயரமும் அடைந்தார்கள்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்னும் நாயனார் திருவாக்குக் கிணங்க வணங்காவாயினராகிய கனகனும் விசயனும் அவர் நண்பராய குறுநில மன்னரும் தோல்வியடைந்து தமிழரசன் வெற்றிமாலை சூடிய செய்திகேட்டு சோழனும் பாண்டியனும் பெரும் மகிழ்வடைந்தார்கள் ஆயினும் தமிழ் அரசர்கள் ஆற்றலும் அருளும் ஒருங்கே படைத்தவர்களாதலால் தோல்வியடைந்த ஆரிய அரசர்க்கு மீண்டும் ஏற்றம் காட்டிய சேரவீரனது செயல் கண்டு சிறிது வருத்தம் கொண்டார்கள். சிறையாக இருந்த ஆரிய அரசர் இருவரையும் தமிழரசர் இருவரிடமும் காட்டிவரும்படி சேரமன்னன் தன் ஒற்றனுக்கு ஆணை செய்தான். அவ்வாணையை மேற்கொண்டு ஒற்றன் ஆரிய அரசர் இருவரையும் கொண்டு சோழனது அரண்மனைக்குச் சென்றான். அம்மன்னவன்,

"நின் அமர் அழுவத்து நெடும் பேராண்மையொடு
வாளும் குடையும் மறக்களத்து ஒழிந்து
கொல்லாக் கோலத்து உயிர் உய்ந்தோரை
வெல்போர்க் கோடல் வெற்றமன்று"

என்று கூறினான். தமது படைக்கலங்களை யெல்லாம் போர்க்களத்திலே போட்டுவிட்டு முனிவர் கோலங்கொண்டு தப்பிப்பிழைக்கக் கருதிய ஆரிய அரசர் இருவரையும் சிறையாகக் கொள்ளுதல் அறப்போரன்று என்று சோழ அரசன் கருதினான். அதன் பின்னர் ஆரிய அரசர் இருவரையும் கொண்டு ஒற்றன் பாண்டிய அரசன் அரண்மனைக்குச் சென்றான். அவ்வரசன்,

"அமர்க்களம் அரசனது ஆகத் துறந்து
தவப்பெருங்கோலம் கொண்டோர் தம்மேல்

கொதியழற்சீற்றம் கொண்டோன்கொற்றம்
புதுவது என்றனன் போர்வேற் செழியன்"

போர்க்களத்தைச் சேரனிடம் ஒப்புவித்து தவக்கோலங் கொண்டு தப்பியோடிய ஆரிய அரசர் மீது சேரன் கொண்ட சீற்றம் புதுமையாக இருக்கின்றது என்று பாண்டியன் மொழிந்தான். இவ்விருபெருவேந்தர் வாய்மொழியால் அக்காலத்தில் அருளோடு அளாவிய ஆண்மையே தமிழரசர் போர்முறையில் விளங்கித் தோன்றிற்றென்பதும் தமிழரசர் அறப்போர் ஒன்றையே ஒப்புக் கொண்டார்களென்பதும் இனிது விளங்கும்.

இவ்வாறு போரில் வெற்றி பெற்ற அரசர்கள் தும்பை மாலை சூடுவது வழக்கம். சேரன் வஞ்சிமா நகரத்தினின்றும் படையெடுத்துச் செல்லும் பொழுது வஞ்சிமாலையை அணிந்திருந்தான். போர் முடிந்து வெற்றி பெற்றபொழுது தும்பை மாலை சூடினான். கங்கையாற்றின் தென்கரையில் சேரன் தன் சேனையோடு ஆரிய மன்னர் அழகுற அமைத்து வைத்திருந்த வெள்ளிடைப் பாடியில் புகுந்தான். அங்கு,

"மன்பெரும் கோயிலும் மணி மண்டபங்களும்
பொன்புனை அரங்கமும் புனைபூம் பந்தரும்
உரிமைப் பள்ளியும் விரிபூஞ்சோலையும்
திருமலர்ப்பொய்கையும் வரிகாண் அரங்கமும்
பேரிசை மன்னர்க்கு ஏற்பவை பிறவும்"

ஆரிய அரசர்கள் அமைத்திருந்தார்கள். அவ்வெள்ளிடைப் பாடியில் சேர அரசன் சிறப்பொடு வீற்றிருந்து கடும் போரில் கைகால் முறிந்தும் காயம் பட்டும் மாற்றாரைக்கொன்றும் வீரச்செயல் நிகழ்த்திய வீரர்களையெல்லாம் வரவழைத்து,

" புறம் பெற வந்த போர் வாள் மறவர்
வருக தாமென வாகைப் பொலந் தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்தான் "

என்று ஆசிரியர் கூறுகின்றமையால் சோழன் தனது வீரர்களுக்கெல்லாம் பொன் தோடு (medal.) பரிசாகக் கொடுத்தான் என்பது அறியப்படுகின்றது.

இன்னும் இரு வேந்தர் தம்முள் மாறுபட்டுப் போர் செய்யும்பொழுது அமர்க்களத்தில் வெற்றி மாலை சூடிய அரசனுக்குத் தோல்வியுற்ற அரசன் தன் படைக்கலங்களைக் கொடுக்கும் வழக்கம் அக்காலத்திய போர் முறையில் இருந்ததாகத் தெரிகின்றது. இவ்வுண்மையை

" அடையார் முனையகத்து அமர் மேம்படுநர்க்கு
படைவழங்குவதோர் பண்பு உண்டாகலின் "

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இவ்வாறு சிறையாக விருந்த ஆரிய அரசர் இருவரையும் சோழன் கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து முடித்த பின்னர் சிறை வீடு செய்து வட நாட்டுக்குப் போகும்படி அனுப்பினான்.

R. P. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்.,

ஆளப்பிறந்தவன் ஆளுவன்

(45-ம் பக்கத் தொடர்ச்சி.)

மலையென்றும், பள்ளத்தாக்கு என்றும், பாராமல் வெருட்டினான். கடைசியில் யாவரும் பின் தங்கிட அரசன் ஒருவனே தன்னந் தனியாக நின்றான். கதிரவனும் மறைந்து காரிருள் சூழ்ந்தது.

இதை யறிந்த காவலன் "இன்றிரவு இப்பருக்கைக் கற்களும் உலர்ந்த சருகுகளும் தான் என் அமளியாகும்" என்று தன்னுள்ளே எண்ணிக்கொண்டான். உடனே குதிரையைவிட்டுக் கீழிறங்கி, கிடைத்த மீனொளியால் ஓர் மெதுவான இடத்தைத் தேடிச்சென்றான். அச்சமயம் வெகு தூரத்தில் மங்கல் ஒளி ஒன்று கண்ணிற்பட்டது. அத்திசையை நோக்கிச் செல்ல அங்கு ஒரு திறந்த வெளியின் மத்தியில் குடிசை ஒன்று நின்றது. பாதி திறந்திருந்த கதவின் வழியாக முன் கண்ட வெளிச்சம் என்று தேர்ந்தான்.

வாயிற் படியண்டை செல்ல, புற்றரையின்மீது திடீரென ஒரு உருவம் சென்றது. உற்று நோக்க, தடித்த ஒரு மனிதன் கையில் தடிகொண்டு நின்றான். "நண்பனே! இன்றிரவு உண்ணச் சிறு உணவும், படுக்கச் சிறு இடமும் தந்தருள வேண்டும்" என்று வேந்தன் வேண்டினான்.

"அன்பனே! என் மனைவி நமன்கையில் இருக்கின்றாள். குடிசைக்குள் இடமேயில்லை. வேண்டுமானால் அதோ தெரிகிற கொட்டகை என் கழுதைகளைக் கட்டுமிடம். அவைகள் நகரில் நின்று விட்டபடியால் இரவைக் கழிக்கலாம். என்னிடம் கிடைத்த அற்ப உணவைக் கொண்டு வருகிறேன். அவ்விடம் சென்றிருங்கள்" என்றான் அக்குடியானவன்.

இம் மென் மொழியைக் கேட்ட காவலன் "நல்லோனே! இவ்வுதவிக்குத் தக்க பேருதவி அடைவாய், நிச்சயமாய் இரு" என்றான்.

ஆனால் குடியானவன், "மனைவியின் மரண வேதனையினால் மயங்கிக் கிடக்கின்ற எனக்கு நீர் கொடுக்கும் பொருளில் யாதொரு இச்சையும் இல்லை" யென்று சொல்லிக் கொண்டே தன் இல் புகுந்து உடனே ஒரு தீபத்துடன் சில உணவுப்பொருளைக் கொணர்ந்தான். அவை உலர்ந்த

சிறிது ரொட்டித்துண்டும் புளித்த சாராயமுமே. இவை யுடன் கூடாரத்தின் வாயிலை யடைந்து அரசன் முன்பு ஆவலாக வைத்தான். அரசனும் அப்புல்லுணவை, நல் லுணவெனக் கொண்டு, குதிரையையும் ஓரிடத்திற்கட்டி விட்டு, அயர்ந்து நித்திரை செய்ய ஆரம்பித்தான்.

நித்திரை நின்றது. ஒரு மணி நேரங்கூட இராது. பொய்யான மாத்திரம் சொரிந்தது. மனந்திடுக்கிட நித்திரை நீங்கியது. கண்டகனின் கடைமொழி யொன்றே கருத் தில் நின்றது. அது "விடு! விடு!" என்ற எழ்மைக்குரலே. அதனால் மனத்தில் மண்டியது. கத்தியை யுருவி வெளிவந் தான். மரக்கிளையிலிருக்குமாந்தின் அழும் ஒலியன்றி வேறொன்றும் காதிற் படவில்லை யாவரும் ஆண்டு இலர். இராக்காலத்தின் முல்லை நில மெல்லொலி மாத்திரம் மேல் நின்றது.

அதைப் பற்றி, வேந்தன் மீண்டும் இடத்தை யடைந்து துயில் கொண்டான். முன்போலவே, சற்று நேரத்திற்கெல் லாம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். 'விட்டுவிடு!' 'விட்டுவிடு!' என்ற பெருங் குரல் ஒன்று காதில் விழுந்து வெருட்டியதுபோல் தோன்றிற்று. உணர்வு கலங்கி உள் ளம் திகைக்க நின்றான். நயனம் இரண்டும் நலிவுற்றன. துயிலோ மறுபடியும் தாண்டியது. தலையோ தாங்குவதற்கு அரிதாயிற்று. இவ்வமயம் பின்வருமவற்றைக்கூறி மனத்தை மயங்கச் செய்த முதியோரைக் கனவிற் கண்டான். முன்னை விடக் குறுகிய மேனியோடு, தன்னை நோக்கி வருவதாகவும், வந்து தன்னண்டை நின்று "ஒருவர் விடுவர் மற்றொருவர் கொள்வர் காலன் கண்ணீ பட்டகாலத்து இக்கானவனின் முழக்கைக் காவலனாவான்" என்று, பரிகசிக்கும் புன்னகை யோடு சொன்னதாகவும் எண்ணினான்.

இவ்வுரைகள் மூன்றுமுறை அரசனை எழுப்பின. மறு

படியும் இவ்விதவேதனை ஏற்படாவண்ணம் விழித்திருக்க விரும்பினான். ஆனால் தானடைந்த களைப்பு கண்ணை மூடியது. கனவொன்றும் நிகழாமற்போக, கதிரவன் காய ஆரம்பித்த வரையில் கண்ணயர்ந்தான். பிறகு துயில் நீங்கி கானவன் குடிலை நண்ணினான். அங்கே அவன் மனைவி உயர் உலகம் சென்றிருக்க அன்னாள் பெறு நலம் பெற்ற ஆண்குழவி கதறிற்று.

மடிந்த மனையாள் படுக்கையின் பக்கலில், துயர் மிகுதியால், சிரம்தொங்க குடியானவன் முழந்தாளிட்டான். அக் கோலம் காண்போர் மனம் இளகும். ஆனால் அண்ணலின் மனமோ கற்பாறையாயது. முதியவர் கூறியவாறு தனக்குப்பின் தன் குலத்தையறுத்து தானியாள்வதற்கு இருக்கும் மகவைப்பார்க்கப் பார்க்க மனம் கன்மனமாயிற்று.

அவ்வாறு அக்குழவியை அழுந்த நோக்கிப் பார்க்குங் காலத்து, பெருஞ் சங்கொலி ஒன்று காதில் விழுந்தது. ஒலி தன்னைச் சேர்ந்தார் வருகையை வரைந்தது. அரசனும் பதில் ஒலி உடன் கொடுத்தான். வேந்தனின் வேலைக்காரர்கள் இதைச் செவி மடுத்ததும் "நம் இறையைக் கண்டோம்! நம் இறையைக் கண்டோம்!" என்று மனம் கொக்கரித்தார்கள். பசும்புற்றரையிற் கூடினர். அண்ணல் என்று தெரிந்தவுடன் அக்குடியானவன் இடம்விட்டுப் பெயர்ந்து வாய் பதைத்து நின்றான். பிறகு தன் மனிதர்களை நோக்கி, "இக்குடியானவன் நேற்றிரவு உண்ண உணவும் படுக்க இடமும்தந்து உதவினான். இவ்வரிய வுதவிக்கு கைம்மாறு பணத்தைக் கொடுப்பது பெரிதன்று. இதோ கிடக்கும் இச்சிறு வீரக் குழந்தையை நம் அரண்மனை சேர்த்து, வளஞ் சொரிந்து, வளர்க்கவேண்டும். அன்றியும் தக்க வயதடைந்த காலத்து ஆயுதப்பயிற்சி செய்துவைத்து அரச சேவையில் அமரச் செய்வேன்." "இல்லாளை இழந்தும்

இனிமை புரிந்த என் இன்பனே! இவ்விஷயத்தில் உன் எண்ணம் யாது? என்றான் புரவலன்.

குடியானவனும், துக்கத்துடனே, " ஐய! உம் விருப்பத்தின்படியே யாகட்டும்." அரசனும், தன்னுடன் நின்ற பிரபு ஒருவரை, குழவியை கொண்டுவரும்படி கட்டளையிட்டு, குடியானவன் துயர் ஆறும்பொருட்டு கொஞ்சம் பணமும் கொடுக்க எண்ணினான். அவ்வண்ணமே உள்ளிடம் வைக்கோலினால் வளையப்பட்டுள்ள ஒருசிறு மரப்பெட்டியில் குழந்தையை வைத்து, தகப்பன் குழந்தையைத் தத்தஞ் செய்தான். பிரபுவோ, தன் மொழியொன்றுங் கூறாமல், வெறுப்புடனே கொஞ்சம் தங்க நாணயங்களைத் தரையின்மீது எறிந்தான். முடிந்ததும் அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் தத்தம் குதிரைமீதூர்ந்து அடவிக்குள் ஆழ்ந்தனர்.

காடு கடந்து மேல் நிலம் எய்தினர். செய்மைப் பள்ளத்தாக்கில் நெளிந்து செல்லும் நீரோடை யொன்று கண்ணிற்பட்டது. மனத்தினிடத்தே மறைந்து கிடந்த பெரிய உபாயம் பலித்து விட்டதுபோல் அண்ணலின் கண்கள் திடீரென ஒண்மை கக்கின.

"ஐயன்மீர்! நீங்கள் யாவரும் முன் செல்லுங்கள். நும் துணை இனி வேண்டேன். நானும் இக் குழவியை வைத்திருக்கும் பெருநிபக்காரரும் கண்ணைக் கவரும் கழனிகளிடையே மெல்ல ஊர்ந்து இல்லஞ் சேருவோம். ஒரு கால் ஆண்டு தவழ்ந்து செல்லும் நீரோடையின் பக்கல் இம்மகவிற்கு ஏற்ற தாதியையும் காணுதல் கூடும். அவ்வாறு ஏற்பட்ட விடத்து அது பாலப்பருவம் அடையும் வரையில் அவள் பாது காப்பில் வைத்தலும் சாலும்" என்றான் இருள் மனங் கொண்ட இறையோன்.

இம்மொழி பகர்ந்ததும் அனைவரும் கடுகிச் சென்ற

ளர். அவர்கள் தோற்றம் கட்புலனுக்குக் கரையுமட்டும் காத்து நின்றான். தன்னுடனிருந்த பேளூழியக்காரனை நோக்கினான். குழலியிருந்த பேழையையும் உற்றுப்பார்த்தான். அதன் ஒரு பக்கத்தில் வெண்ணிறப்பரப்பில் செங்கேசரி உருவம் ஒன்று காவலனின் கருவிழியைக் கவர்ந்தது.

'துணைவனே ! என்னண்டை வந்து நான் சொல்வதைக் கருத்தில் கொள்ளும்'' என்றான் அரசன். கிழத்துணைவனும் அரசனின் ஆணைவழி நின்றான். வேந்தன் உடனே வயோதிகர் தன்னிடம் மொழிந்த அனைத்தையும் கூறி சென்ற இரவிற் கண்ட கனவையும் அவன் காதிற் புகுத்தான். பிறகு "இக்குழந்தைஇளங்காளையும் ஆவதோ. இரத்தம ஒரு துளி கூட சிந்தாமல் இதனை இடருக்குள்ளாக்கி என்னுடன் உண்டாயிருக்கும் இணையை அறவேயொழித்து விடுதல் வேண்டும். ஆதலால் இம்மகவை அதோ மயங்கி மயங்கிச் செல்லும் நீரோடையில் இடுவாய்'' என்றான் இறையோன்.

கட்டளையைக் காக்க நிற்கும் கன ஊழியக்காரன் "ஐயனே ! இச் செய்கையாயினும் இதற்கு மேம்பட்ட செய்கையாயினும் செய்யச் சித்தம். ஆனால் இம்மகவு இளவரசனாக நிற்கத் தலைப்பட்டிருப்பது உண்மையாயின் தாங்கள் கொண்ட யோசனை இதற்கு எவ்வாறு இறுதி பயக்கும்'' என்றான்.

"அதைப் பற்றி நீர் யாதொன்றும் புகல வேண்டாம். நான் கூறியவாறு, இப்பெட்டியை நீரிலிடும்'' என்றான. இம்மொழி விழுந்ததோ இல்லையோ ஓடையைக் கடக்க ஏற்பட்டுள்ள கட்டைப் பாலத்தை இருவரும் அணுகினர். உடனே பேரூழியக்காரர் அப்பெட்டியை அருவியிலிட்டார். திண்ணென்ற சப்தம் எழும்பி நீர்த்திவலைகள் மேல் கிளம்பின. அரசன் ஆவலுடன் பார்த்து நின்றான். சுழன்

றுச் சுழன்றுச் செல்லும் நீர்ப்பாதையில் நிலை குலையாமல் பெட்டி சென்றதே யொழிய நினைத்தவாறு பெட்டி கவிழ்ந்து இடுக்கண் ஒன்றும் இடைப் பெய்திலது. இதை யறிந்த அரசன் இடிந்த மனத்துடன் தான் செய்த காரியம் உலகுக்கு அறியவந்திடுமோவென்று தன்னுள்ளே பதறினான்.

ஆயினும் நேரஞ் செல்லச் செல்ல "இதைக்காட்டினும் மேலானவழி எனக்கு ஒன்றும் தோன்றவில்லை." என்று எண்ணி, அவ்வெண்ணத்தை ஒழிக்க முயன்றான். பார்ப்போருக்கு கவலையற்ற மனதுடையான்போல் நடித்து தன்னுடன் வந்த 'சமயவேல்' என்பவருடன் பற்பல சிறு விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டே அரண்மனை நோக்கிச் சவாரி செய்தான்.

அரண்மனை வாயிலை அணுகியதும், தலைமை உத்தியோகஸ்தன் எதிர் கொண்டழைத்து நற்செய்தி ஒன்று அறிவித்தான். அரசன் பசுங்காட்டில் வேட்டையாடியிருந்த சமயம் பெண்மகவு ஒன்று பிறந்ததென்றும் அது பெரு நலந்திகழ்ந்து விளங்குகிறதென்றும் கூறினான். மக்கட்பேறு வாய்த்ததைக் கேட்டு பேருவகையில் மூழ்கி சென்ற நாட்களில் அனுபவித்த பெருந்துயரனைத்தையும் மறந்தான்.

மூன்றாம் அத்தியாயம்.—இளைஞன்.

ஏழிரண்டாண்டுகள் கடந்தன. பின் பனிக்காலத்தில் ஒருநாள், ககனம், கண்பெற்றது எனக் கூடும் காலை வேளையில், புட்கள் ஒன்றோடொன்று பொருதுவதைப் பார்ப்பதின் பொருட்டு அரசன் தன் அருமையாளர் சிலருடன் புறப்பட்டான். வேடிக்கையாகக் காலங்கழிக்க வேண்டுமென்று எண்ணிக் கிளம்பிய வேந்தன் முற்கூறிய நீரோடையை தற்செயலாய் அடைந்தான். காலமும் பகற் பொழுதானபடியால் அவ்வோடையின் பக்கலிலுள்ள மாவுச்சாலை

க்கு வந்தான். இடமோ இளைப்பாறுவதற்கு எற்றவாறு அமைவுடைத்து. கதிரவன் ஒளியும் கடுமையாயிருந்தது. ஆகவே அரசன் அங்கே தங்கி சற்று பசியாற எண்ணி னன். கொண்ட எண்ணத்தையும் குறிப்பித்தான். இதனை யறிந்த மாவரைப்போன், தனக்குக் கண்ணியம் வாய்த்த தெனக்கருதி, உடனே சென்னியுடை நீக்கி, பரபரப்புடன் ஓடிவந்து, குதிரையின் அங்குபிடியை அமர்த்தினன். அரச னும் அதனின்று இழிந்தான். இறங்கியதும் அண்டையில் அழைத்து நின்ற அருங்கனித் தோட்டத்திற்குள் சென் றுன். அங்கே சென்னிறம் துலங்க சேய்மையில் செறிந்து விளங்கிய இலந்தப்பழங்கள் இறையோனைத் தம்மிடம் இழுத் தன. அதனையடுத்து இலங்கிய காக்ஷியும் கண்ணைக் குளிரச் செய்தது. ஆகவே அகன்று பருத்துயர்ந்த ஓர் மரத்தின் நிழலில் அமர்ந்தான். மாவரைப்போன் வொடி நேரத்திற் குள் பாலும் தேனும் பரிவுடன் பயந்தான். அரசனும் அவைகளைப் பாங்குடன் பானம் பண்ணி பசிதுயர் அகற்றி, பரமானந்தங் கொண்டான்.

அவ்வமயம், தீரமனமும் ஒளிதிகழ் பார்வையும், கண் கவர் உறுப்பும் பெற்ற இணையிலா இளைஞன் ஒருவன் மாவரைப்போன் பக்கலில் நின்றுன். இவனைக் கண்ணுற்ற காவலன் "இவ்விளைஞன் உன்னை ஒருவகையிலும் ஒத்திலன். ஒரு கால் தன் அன்னையையே யொப்பான் போலும்" என் றுன். இதனைச் செவிகொண்ட யந்திரக்காரன் "நாங்கள் இவ்விளைஞனின் பெற்றோர்கள் அல்ல. பதினன்கு ஆண் டிற்கு முன்னர் இதே தினத்தில் தாய் தகப்பனற்று, திக் கற்ற குழந்தையாகக் கண்டோம். அன்று முதல் எங்க ளுடன் இருந்து வருகிறுன். என் கருணை நிறைக்கோவே! இப்போது, தங்களுக்கும் விருப்பமிருக்குமேல், என் மனைவி யையழைத்து வரலாறு யாவற்றையும் கூறச்செய்கிறேன்" என்றுன். (தொடரும்) M. சோமசுந்தரம் பிள்ளை, B.A., L.T.,

எல்லாம் சிவன் செயல்

(தொகுதி 4. 787-ம் பக்கத்துத் தொடர்ச்சி)

சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய நாம் அளப்பில் ஆற்றலும், அறிவும் உடைய இறைவன் செய்கையை எளிதில் அறியக்கூடுமா? சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றுக்கும் பொருந்த இறைவன் அல்லது சிவன் பரமதயாநிதி, கிஞ்சித்தேனும் பக்ஷபாதமற்றவன். சகல ஜீவராசிகளும் சம்பூர்ண சுகம் அடைவதே நினைக்கின்றவன். ஆகையால் அவனுடைய ராஜ்ஜியத்தில் ஒன்றும் நிலை தவறாது. யாவும் நியாயமாகவும், கிரமமாகவுமே நடக்கும் என்கிற ஸ்திர புத்தி நமக்கு முதன் முதலில் அப்பியாசமாக வேண்டும். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் ஆப்தர் மொழியை சதா சிந்திக்கவேண்டும். தெய்வம் உண்டு என்று இரு. ஒன்று என்று இரு. சிவன் செயலாலே யாதும் வரும் எனத் தேறு. ஆனால் நல்லோர் வருந்துவதும் அல்லோர் வாழ்வதும் எங்ஙனம் என்றால் அது அவரவர் பூர்விக ஜென்மாந்தரங்களில் செய்த வினையின்படியே வரும் என்க. வினைப்பயனை அனுபவித்தே தீரவேண்டுமல்லால் வேதம் முதலாம் எனைத்தாய நூலகத்தும் அதனை வெல்ல வழியில்லை என்றார் ஆன்றோர். ஆகையால் சந்தோஷம் மீறிய காலத்து இறைவனை புகழ்வதும், அல்லாத காலத்து நிந்திப்பதும் கீழ்மக்கள் செயல். சுகமும், துக்கமும் அளிப்பவன் அவன். அவற்றை நம்முடைய கர்மத்திற்குத் தக்கபடி அளிக்கின்றான் என்று ஸ்திர புத்திசெய்து கொண்டு சுகத்தால் மகிழ்வதும், துக்கத்தால் வருந்துவதுமின்றி ஒரு மனத்தனாய் இறைவன் செயல் இருந்தவாறு ஈன்னே என்று இருக்கப் பழகவேண்டும்.

'அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்றபடி நம் அறிவிற்கு எட்டாத நிலை தவறுகள் நேர்ந்தபோது மனதைத் திடப்படுத்திக் கொள்ளல்வேண்டும். நல்லோர் வருந்துவது தூயராவதற்கே. பொன்னைக் காய்ச்சக் காய்ச்ச மாற்றுமிகும் அல்லவா? ஏதோ தோஷங்கள் நம்மிடத்திலிருக்கின்றன. அதற்காகவே நாம் வருந்துகிறோம். அந்தோஷங்கள் நம்மைவிட்டு நீங்கிவிடின் நாம் பரிசுத்தராகலாம். அப்போது அவன் அருளை முற்றும் பெறலாம். ஆகையால் யாவும் நன்மைக்காகவே உண்டாகின்றன. 'அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.' 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே' என்றபடி தாங்க முடியாத இடுக்கண்கள் வந்த இடத்தும் எல்லாம் அவன் செயல் என்னும் தியானத்தால் அவற்றை யிடுக்கண் படுத்த வேண்டும். பக்த சிரோமணிகள் யாவரும் அப்படியே தமக்கு வந்த எல்லா ஆபத்துகளையும் தோற்கடித்திருக்கின்றார். பிரகலாதன் தன் தந்தையினால் எவ்வளவு இடுக்கண் உற்றான்? சதா நாராயண தியானமே செய்துகொண்டிருந்த அவனுக்குத் தன் தந்தையினால் அத்தகைய கஷ்டங்கள் ஏன் ஏற்பட்டன? அக்காலங்களில் எத்தருணத்திலாவது அவன் மனது கிஞ்சித்தேனும் தடுமாற்ற மடைந்ததா? நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம் என்றபடி ஈஸ்வரத் தியானம் அவனுக்கு எப்போதும் தளர்வுற்றதில்லை. காய்ச்சக் காய்ச்ச யினிக்கும் பால்போல் அவனுக்கு பக்தி அதிகரித்தே வந்தது. கடைசியில் யுக்த தருணம் வந்தபோது இறைவன் அவனுக்குப் பிரசன்னமாகி பகைவனைக் கொன்றான். தனது பக்தனையும் ரக்ஷித்தான். (தொடரும்)

N. பாலசுந்தர முதலியார், பி. ஏ., பி. எல்.

செல்வச் செருக்கு.

மிகுந்த ஐசுவரிய மென்னுமோர் வியாதி எவனொருவனை யடையுமோ அவனுக்கு தன்னெதிர்ப்படும் உருவம் இன்னதென்று தெரியாதபடி அவனது பார்வை மழுங்கிப் போம்.

"பெருஞ்செல்வமாம் பிணிவந்துற்றிடில்
உருத்தெரியாமலே யொளிமழுங்கிடும்—".

என்றார் பெரியோர்.

பணமென்றால் பல்லுந்திறக்கும் பல்லவராய செட்டியார்போல் சில செல்வம் வாய்ந்தவர்கள் வளநிதி படைத்தோமென்று பணப்பேய் பிடித்துத் தாண்டவமாடவும், தன்னைவிடத் தாழ்ந்தோரிடத்து ஊமைகளாயும் செவிடர்களாயும், குருடர்களாயும் நடக்கின்றனர்.

தேன் மொழியன்னத் தென் மொழியாகிய நம் அருந்தமிழைப் போற்றும் அரிய பேரியோர்கள் தங்கள் வறுமையின் காரணமாக முப்பத்திரண்டு பற்காட்டி இசையுடனே பண்ணாகச் செந்தமிழ் பாடிவந்தாலும், அச்சோ? அவர்கள் மனம் புண்படுமாறு ஏசிப்பேசி அவமானத்திற்குள்ளாக்கி அனுப்புகின்றனர் செல்வந்தர்கள்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப் பாயின்றி, இருக்க இல்லமின்றி, அலைந்துதிரியும் ஏழையாளர்களைப் பரிபாலிப்பது செல்வந்தர்களின் கடமையன்றோ! பணமே பெண்டிர், பணமே மக்கள், ப்ணமே உறவு, ப்ணமேதெய்வம், பணமே குரு, பணமே முற்றுமாகி, கடலாடை யுடுத்த இவ்வவனியின் கண் வாழ்தல் யாதுபயன்?

செல்வந்தர்களின் முக்கிய கடமையாதெனில் அண்டினோரை ஆதரிக்கவும், தன் தேசத்திற்காகவும், மதத்திற்காகவும் உழைக்கவும், நல்வழியில் தம் பொருளைச் செலவு செய்யவும், உலோபிகளாயிராமல் தாராளசிந்தையுடையவர்களாகவும், செல்வத்தினால் செருக்கடையாமலு மிருப்பார்களானல் அவர்கள் கடவுளின் அருளுக்கு அருகராகி இக லோகத்திலும் பரலோகத்திலும் மேன்மையுடையவர்களாயிருப்பரென்பதற்கோரையப் பாடுண்டோ ?

ஐயோ ! எந்தச் சமயத்தில் கூற்றுவன் இந்த மாமாகிய சரீரத்தை வெட்டி முறித்துக் கீழே தள்ளுவானோ ! ஆ ! மாணம் முன்நிற்கின்றது ! மூப்பும் பிணியும் காத்திருக்கின்றது ! ஒ ! செல்வந்தர்களே ! வீணே தற்புகழ்ச்சி செய்யாதேயுங்கள் ; இரப்போர்க்கு இல்லையெனக் கூறுதீர்கள் ; உங்கள் சமயத்திற்காகவும், உங்கள் தேசத்திற்காகவும், உங்கள் தாய்ப்பாஷையாகிய தமிழ் அபிவிருத்திக்காகவும் ஒத்துழையுமின்கள் !

" முன்னரே சாகாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்பின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து "—நாலடியார்.

மிறகு. சு. வீரபத்திர பிள்ளை.

இலக்கண வாராய்ச்சி

(கண்ணபுரத்துக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனர் எழுதியது).

நான் ஆய்ந்துவரும் பலவகையாராய்ச்சியினுள்ளே 'இலக்கணவாராய்ச்சி' என்பதும் ஒன்று. இன்னோன்னவற்றை யெல்லாம் நீண்டு ஆய்ந்து துணிந்து கோவை செய்து தனி

நூல்களாக வெளியிடுதலே எனது நோக்கமேனும் அங் காந்து கொண்டு வந்தவற்றையெல்லாம் விழுங்கிவிடலாம் என்றே காத்துக் கொண்டுவரும் போலிப் புலமைப் புலி களும் பலப்பல அங்கங்கே பதுங்கிக் கொண்டிருத்தலைப் பல காலும் பலவாறு தெரிந்து கொண்டேனாதலின் இங்ஙனம் வெளியிடுதலும் இயல்பாயிற்று.

தமிழ்நாட்டிலே தலை சிறந்த மாசிகப் பத்திரிகையென நாமஞ்சூட்டிக் கொண்டதொரு பத்திரிகை எனது பொரு ளுரைகளிற் பலவற்றையும் விழுங்கி யேப்பமும் விட்டுவிட் டது. இன்னோன்ன நன்னாட்டறிஞர்கள் கவனத்திற் குரிய.

நன்னூலார் "ஏழாமுயி * * * * * றிகரமும்" என்னும் சூத்திரத்துள்ளே 'ட, ர, ல' க்களை முதலாகக் கொண்ட வடமொழிப் பதங்கள் தமிழில் எவ்வாறு விகாரப் பட்டு வருமெனலைக் கூறுமையின் அவற்றது விகாரத்தினை

"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் டவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே."

என்னும் இச்சூத்திரத்தா லினிது விளக்கிப் போந்தார்.

["ஏழாமுயிரிய்யும்" என்றதனாலும், "இணைந்தியல் காலை" என்றதனாலும் "ட, ர, ல" க்களல்லாத பிறமெய் கள் மொழிக்கு முதலிடைகடைகளில் வற்றபெற்றியாக வரு தற்கமைத்தமை உய்த்துணர்ந்து கொள்க.]

இதனுள்ளே "டவ்விற் கிய்யும்" என்னும் பாடத்தை மயிலை நாதரையுள்ளிட்ட உரைகாரரெல்லாரும் "யவ்விற் கிய்யும்" எனமாற்றிப் பாடங்கொண்டு யக்ஷன்—இயக்கன் என்றுங்கு உதாரணமும் காட்டிப் போந்தனர்.

(தொடரும்)

வள்ளிநாயகி :—"போனது போகட்டும் இனி அதைப்பற்றி ஒன்றும் நினைக்கவேண்டாம்," என்று சொல்ல ஸ்ரீநாலக்ஷ்மி, வள்ளிநாயகியின் கழுத்தைச் சுற்றித் தன் கரத்தைப்போட்டுக்கொண்டாள். இது வன்றோ ஸ்நேகலக்ஷணம்.

மற்றச் சிறுமியரும் தம் அறிவீனச் செயலுக்காகவும் வள்ளிநாயகி கொடுத்த பிரசண்டமாருதப் பெருங் கொடைக்காகவும் மனம்வருந்தி, வள்ளிநாயகியிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டார்கள்.

இரண்டாம் அத்தியாயம்.

கடைக்கண்பார்வை—கண்டதும் காதல்.

" இன்றென்ன இவ்வளவு கூட்டமும் கடைகளும்! ஸ்வாமியின் இரதங்கள் ஆகாயத்தையளாவ அலங்கரித்து பெரும் வடங்களால் தொடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன! இன்னமும் சூரியன் உதிக்க இரண்டு நாழிகை செல்லுமே; இதற்குள் இவ்வளவு ஜனங்கள் எங்கிருந்து வருகிறார்கள்? திருச்செந்தூரே ஒரு புதுச் செந்தூராகி விட்டதா? எத்தனை கடைகள்! என்னமுழக்கம்!! எங்கும் திருப்புகழின் சத்தம்! அருணகிரிநாதரே வந்திருக்கிறாரோ? அப்படியாயின் புறுத் திருப்புகழன்றோ பாடுவார். ஊருக்கு வடபுறத்தில், கழிவு நீரோடைக்கு சமீபமாக—அதென்ன சங்கதி அங்கே? எவ்வளவு குதிரைகள்!

எத்தனை விஷயங்கள்! பாடங்கள்! இவையெல்லாம் எங்கிருந்துதான் வந்தன?" என்றொருவர் சொல்லிக்கொண்டு, அங்குமிங்கும் அலைந்துற்றார்.

நாமும் இரண்டு மாதக்காலமாக இங்கில்லாததினால் நமக்குக் காரணம் தெரியவில்லை. "இதென்ன மாதம்?" "மாசிமாதம்." சரிதான் சரிதான். இன்றுதான் பத்தாம் திருவிழா. இரதோற்சவதினம். கழிவு நீரோடைப் பக்கத்தில் காணப்படுவதுதான் கால்நடைச் சந்தை. "இரதத்தை நோக்கி வருவார்கள் யாவர்?" இவர்களை 'எழுகரைக்காரர்' அல்லது 'எழுதண்டிகைக்காரர்'* எனப் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் அழைக்கப்பட்ட ஜாதிகளின் வர்க்கத்தினராவர். எழுதண்டிகைக்காரரில் முதல்வரும் தலைவருமான வெட்டிபாண்டார்† என்னும் வெற்றி கொண்ட நாடார் என்பவரே திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமியின் கோவிலைக் கட்டி அதற்கு வேண்டிய மானியங்களையும், படித்தரங்களையும் ஏற்படுத்தினவராகும். அந்த வெற்றிகொண்ட நாடாரின் வம்சத்தவருக்குப்பின், கோவிலின் மேற்பார்வையும், அதிகாரமும், அவ்வம்சத்தவரின் ஆதிக்கத்தையடைந்த காயாமொழி நாடார்களின் இடமிருந்து வருகின்றது. இந்நாடார்களாலேயே நாம் முன் அத்தியாயத்திற் கூறிய சிவன் கோவிலிற்குள்ளிருக்கும் மண்டபமும், ஆயிரக்கால் மண்டபமும், இன்று

* தண்டிகைக்காரர்=பல்லக்குப் பிரபுக்கள். † ஒரு யுத்தத்தில் அபரிமிதமான வீரர்களை வெட்டி ஜயம் பெற்றதால் வெட்டிபாண்டார் என்னும் காரணப்பெயர் வந்தது.

இழுக்கப்பட வேண்டிய இரதங்களும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. நாளதும், ஐப்பசி மாதத்தில் சுவாமிக்கு திருக்கலியாணம் நடக்கும்பொழுது, முதல் நாள், மாப்பிள்ளை வீட்டாரின் விருந்தென, இக்காயாமொழி நாடார்களாலேயே பிராமண போஜனம் செய்துவைக்கப் படுகின்றது. இக்கூட்டத்தின் மத்தியில் வருபவரே காயாமொழியின் முக்கியஸ்தரான ஆதித்த நாடாராகும். இவர் முதலில் இரதத்தைத் தொட்டுக் கொடுத்த பின்னரே மற்றவர்கள் இழுக்கவேண்டுமாம். இவர் தொட்டுக் கொடுக்காவிட்டால் இரதம் நிலைக்குவந்துசேராதென்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்வார்கள். அவ்வழக்கப்படி ஆடல் பாடல்களுடன் தேரடியில்வந்து பூஜா நைவேத்தியங்கள் செய்து, தேங்காய்களை விடலை பெறிந்து, வாத்தியங்கள் வெகு ஆர்ப்பாட்டத்துடன் முழங்க, ஆதித்த நாடார் தேரின் வடத்தைத் தொட்டுக் கொடுத்தார். உடனே மற்றவர்கள் தேரின் வடத்தைப்பற்றி இழுக்க ஆரம்பித்தார்கள்.

முதலாவது, தொந்தியப்பர் இரதமும், இரண்டாவது அம்பாளிரதமும், மூன்றாவது சுவாமி இரதமும் இழுக்கப்பட்டன. சுவாமியின் இரதம் தேரடித் தெருவண்டை வந்தபொழுது ஒருவர், "அதாவது என்மேல் கல்லை எறிவது ?" என்று முகத்தைச் சுழித்துக்கொண்டு திரும்பிப் பார்த்தார். வேறொன்றுமில்லை. இரதத்தின் சக்கரத்தில் நியமித்தக்காரரால் எறியப்பட்ட தேங்காயின் துண்டொன்றே இவர் மேல் விழுந்தது. ஆகவே இவர் ஆளுக்குமுன்

அதைப்பற்றி, வெகு விருப்புடன் தின்றார். விடுவாரா அவர்! வலியே வந்த ஸ்ரீதேவியைக் காலால் தள்ள விரும்புவாரா? ஸ்வாமி, தன்னை அறைந்து பிரசாதங் கொடுத்ததாகச் சொல்லிக்கொண்டார். முதலில் அழுதவருக்கு பின்னால் சிரிப்பு. அழுதலால் துக்கம் மாறும். அதிகமாக அழுதலால் சிரிப்பு வருமென்று கூட சொல்லுவார் போலிருக்கிறது.

வள்ளிநாயகி, அன்று சாயங்காலம் பொழுதடையும் தருணத்தில் தேரடித்தெருவில் குதிரை வண்டியொன்றில் வந்து கொண்டிருந்தாள். காலையில் இழுக்கப்பட்ட தேர்கள் அப்படியே அதற்குரிய விடத்தில் நின்று கொண்டிருந்தன. இரதத்தைச்சுற்றி, திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம் என்னும் கைலாசபுரம், திருநெல்வேலி முதலிய ஊர்களின் ஆலயங்களைச் சேர்ந்த யானைகளும், உற்சவத்திற்காக கொற்கையினின்றும் அனுப்பப்பட்ட எட்டு யானைகளும் அலங்கரித்து நிறுத்தப்பட்டிருந்தன. இக்காட்சியைக் கண்ணுற்று வள்ளிநாயகியின் புறக்குதிரைகள் மிரண்டு குதிக்க, இதற்குள் வண்டிச்சக்கரம் பக்கத்துவிட்டுப் படிக்கல்லின்மேலேறி வண்டி குடைசாய்ந்துவிட்டது. வண்டி, பூமியின்மேல் விழுந்து விடுவதற்குள் பக்கத்தில் இன்னொரு வண்டியில் போய்க்கொண்டிருந்த ஓர் புண்ணிய புருஷன் தன் வண்டியினின்றும் திடீரென்று குதித்து வள்ளிநாயகியின் வண்டி விழுந்து விடாதபடி தன் தோளினால் தாங்கி நிறுத்திவிட்டான். வள்ளிநாயகியும் உடன் வெளியிற் குதித்து, தன் வண்டியை விழாமல் தடுத்த மஹானு

பாவன் இளவரசனே யென்றும், தன் உயிரையும் பெரிதாகக் கருதாமல் வண்டியைப் பிடித்து நிறுத்தி னதையும், ஒவ்வொருவருக்கும் தம் உயிர் மேலாசை யிருக்குமென்று முன்தான் சொன்னது தப்பிதமென் றும் தன் மனதிலெண்ணித் தலைகுனிந்து நின்றாள். இளவரசன், வண்டியைத் தோளினால் தாங்கி நிறுத் தினதினால், அவன் தோளில் பலமான அடிபட்டு இலேசாக இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. ஆயினும் அவன் அதைப் பொருட் படுத்தாமல், "பெண்பா வாய்! இக்கூட்டத்தினுள் மிரளக்கூடிய குதிரைகளை என் வண்டியிற் பூட்டிப் புறப்பட்டனை? உனக் கெதி லாயினும் அடிபட்டதோ? நீ, தினம் நமது கலாசாலை க்கு வருபவள்தானே? உன்பெயரென்ன? நீ யார் புத்திரி? பெண்ணே! நான் உனக்குச் செய்த இச் சிறிய உதவிக்குப் பிரதியாக உன் வாயைத்திறந்து ஒரு பதில் வார்த்தை கூறலாகாதா? நான் செய்த உபகாரத்தை ஒரு பெரிதாக உன்னிடம் பேசவர வில்லை. எந்த ஆடவனும், ஆபத்தான காலத்திலிப் படிப்பட்ட உதவி செய்யப் பின்வாங்கமாட்டான், பாவாய்! இதோபார்! தெருவில் போவார் வருவார் யாவரும் நம்மையே பார்க்கின்றார்கள். நேரமும் இருட்டுகிறது. உனக்கெந்த இடத்திலேனும் வண்டி யடிபட்டதோ? அவ்விடத்தை உடனே தடவினால் அது கெடுதல்செய்யாது. ஆகையினால், எவ்விடத்திற் பட்டது சொல்; தடவுகிறேன்" என்று கிட்டி நெருங் கினான். வள்ளிநாயகி, சற்று தூரத்தில் விலகி நின்று கொண்டு கீழ்பார்த்த பார்வையாகவே, "மஹா

ராஜா! வேண்டாம், வேண்டாம், எனக்கு ஒரிடத்தி லும் அபாயமில்லை" என்றாள். இளவரசன், பின்னும் "பெண்மணி! உன் பெயரையேனும் சொல்லக்கூடா தா?" என்றார், இவனுக்கு, பல்லக்கினிடத்தில் [illegible] [illegible] இருவர் பெயருக்குமுள்ள பொருத்தங்களை [illegible] [illegible] தன் பெயரை [illegible] [illegible] [illegible].

இராஜகுமாரியோ, அவன் பார்வையிலகப்பட்டுத் [illegible] [illegible], "உன் பெய ரைச் சொல்ல இஷ்டமில்லையா?" என்று இரக்கத் துடன் கேட்டான். அவள் மெதுவாய் [illegible], "என் பெயர் வள்ளி நாயகி; [illegible] ராஜாவின் மகள்" என்று மெல் லிய குரலில், [illegible] ஆவலோடுபார்த்துச் சொன்னாள். அப்பொழுது அவன் மனது, ஒருவிதமாக உருகிற்று.

அவன் பார்த்த பார்வை, குறவள்ளி நாயகியின் மணாளரான ஸ்ரீஷண்முகப் பெருமானின் அம்பானது சூரனின்மார்பிற் பாய்ந்ததுபோல், இளவரசனின் இருதயத்திலுட் பாய்ந்தது. "வள்ளி நாயகியா? வள்ளி நாயகி! வள்ளி நாயகி, நல்ல பெயர்தான், நல்லது: நீ நெடுநேரமாய் நிற்கின்றாயே. நின்மலரடிகள் நோகும். இனி, நீ உன் வண்டியிற் போகவேண்டாம். ஒருவேளை இன்னும் மோசம் வரும். ஆகையினால் என் வண்டியிலேறிச் சுகமாக விடு செல். அடே சாரதி!

இந்தப் பெண்ணை என்வண்டியிலேற்றத் தனபால செட்டியாரவர்கள் விட்டால் விடட்டும். இந்தப் பெண் தன் வண்டியிலேற வேண்டாம். அவள் வண்டிக்காரன் மெதுவாக வண்டியை இட்டுக்கொண்டு போகட்டும். தோழாய்! என் வண்டியிலேறு.” என வேண்டிக் கொண்டான். அப்பெண்ணோ, பிறர் வண்டியிலேற இஷ்டமிலாள்போல் உடம்பை நெளித்துக்கொண்டு தரையைப் பார்த்து நின்றாள். பக்கத்தில் இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சிலர், “அம்மா! நீ இனியும் உன் வண்டியிலேறிப் போவது நல்லதல்ல. இன்னும் குதிரை மிரண்டால், ஜகன்மோகினி போன்ற உனக்குத் தொந்தரவு உண்டாகலுங் கூடும். ஆகையினால் நீ இவரது வண்டியிலேதானே ஏறு” என்றார்கள். இச்சமயத்தில் காட்டான்போன்ற ஒருவன், “மகாராசா! ஜட்கவண்டியில தொறுக்கிட்ட லெந்தம்வருது. அதில அழகிபட்டிருக்கும்போல அழகுக்கு, இந்தக்குட்டி ஜனியக்கூடமச்சி கெட்டிஞ ரிக்கிறாம் ஆறாம்.” என வெகு விந்தையாகப் பேசினான்.

அவன் சொல்லியதைக் கேட்டபின்னரே வள்ளி நாயகிக்கு, இரத்தம்கசியும் இளவரசனின் தோள்பட்டையைப் பார்க்க நேரிட்டது. அவள் மனம், இளவரசனின் உடலில் இரத்தம் வருவதைக்கண்டு மிகவும் நொந்தது. அதற்காகவாயினும் தன் வந்தனத்தைச் சொல்லவேண்டுமென்று அவள் எண்ணினும், அவளை வாய்திறக்கவிடாமல் ஏதோ தொண்டையில் அடைத்துக் கொள்ளுவதுபோல் தோற்றியது. ‘தனக்காக

அவருக்குப்பட்ட காயம்' என்று நினைக்கவே அவளை அறியாமலே கண்ணீர் ததும்ப ஆரம்பித்தது. எனினும் அவற்றையெல்லாம் ஒருவாறு நீக்கி, "தாங்கள், தங்கள் உயிரையும் பெரிதாகக்கருதாமல் ஏழையாகிய என்னுயிரைக் காப்பாற்றினீர்கள். தங்களுக்கு இவ்வளவு சிரமம் வரும்படி யானதற்கு நானே காரணம். தங்களுக்கு, என்னால் இவ்வளவு நேர்ந்ததற்காக நான் அதிக வருத்தப்படுகிறேன். தங்களுக்கு வண்டியடிபட்டதனால் எவ்வளவு நோவு இருக்குமென்று நான் நினைக்கிறேனோ—அதைவிட எத்தனையோ பங்கு அதிகமாய், தங்களுக்கு இவ்வளவு நேர்ந்ததற்காக, என் மனதில் வருத்தம் உண்டாகியிருக்கிறது. இந்த நன்றியை என் ஆயுள்பரியந்தமும் மறக்கமாட்டேன்," என்று சொன்னாள். இளவரசன்,—"பெண்ணே! நான் இதைப்பற்றி முன்னமே சொன்னேனே. எந்த மனிதனும் இப்படிப்பட்ட சமயத்தில் உதவிசெய்யாமலிருக்கமாட்டான். இதுவே மனித இயற்கை. நீ இதை ஒருபெரிதாக எண்ணி இவ்வளவு சொன்னதற்காக நான் உனக்கு வந்தனமளிக்கிறேன். நேரமாகிவிட்டது. உன்கால்கள் நோகுமே. என் வண்டியிலேறி பத்திரமாய் வீடுபோய்ச்சேர்."

இதைக்கேட்டதும் வள்ளிநாயகி, "மஹாராஜா அவர்களுக்கு, என் தாழ்மையான நமஸ்காரம்," என்று சொல்லி இராஜகுமாரனின் வண்டியிலேற, இராஜகுமாரன் சாரதியை நோக்கி மறுபடியும், "அடேராமா! இப்பெண்ணை பத்திரமாய் செட்டியார் வீட்டில் சேர்த்துவிட்டு, வண்டியை கோவில்மேல

வாசலுக்குக் கொண்டுவா" என்று சொல்ல, சாரதி உத்தரவு வாங்கிக்கொண்டு வண்டியைவிட்டான். வள்ளிநாயகியின் சாரதி குதிரைகளை மெதுவாகப் பிடித்துக்கொண்டு முன்னால் நடந்து சென்றான்.

இளவரசன் நெடுநேரம் வண்டி போவதையே பார்த்துக்கொண்டு நின்றான். தான் வள்ளிநாயகிக்குச் செய்த உதவிக்கு அறிகுறியாய் என்றென்றைக்கும் தன் உடலுடனேயே இருக்கும்படியானதாக, தோளிற் காயம்பட்டதே யென மகிழ்வடைந்தவனாயினும், மனதினுள் வருந்த மொன்று இருப்பதாயும் தோற்றியது. அதாவது, 'வள்ளிநாயகியை, நான் அவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பிவிட நேர்ந்ததே' என்பதே. வண்டி கண்பார்வையை விட்டுமறைந்ததும் மெல்லென நடந்து மேல வாயிலின்வழியாய் கோவிலினுட் புகுந்தான். சுவாமி தரிசனமானதும், கம்மேல வாயிலுக்கதிபன், தனக்கென்று முன்னதாகவே காத்துக்கொண்டிருந்த வண்டியிலேறி அரண்மனை வந்தடைந்தான்.

அன்றிரவு நமது இளவரசனாகிய சுப்பிரமணியனுக்கு சரியானபடி ஆகாரஞ் செல்லவில்லை. ஏதோ வெகு அற்ப சொற்பமாக முடித்துக்கொண்டு, நிலவில் கட்டிலைப் போட்டு, நித்திரையில்லாமல் அங்கு மின்கும் புரண்டு ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். நம் அன்பன், தோளிற்பட்ட காயத்தினால் வருந்தியதாக வாசிப்போர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது. பின் எதனாலென்றால்,

'மாதவரும் [illegible] ...ரு
தெருளலாரா [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]ப்புன் மானிடரோ
மோகசாகரந்தனைக் கடக்கவல்லார்'

'[illegible]
[illegible]
மருமலர்வாழ் திசைமுகனும்
வானவர்க்குநாயகனு மயிடன்குறுவும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]'

[illegible] காம பாணங்களை இளவரசன்மேல் செலுத்தி விட்டான். வள்ளி நாயகியின் [illegible] வில்லாகவும், [illegible] இமைகளையே நாணாகவும், விழி என்னும் வேலையே அம்பாகவும் கொண்டு முதலிலெய்து, அது குறி தப்பாது சென்று இளவரசனின் இருதயத்திலுட் பாயவும் பின்னர் தன்விசுக்களைச் ஞாகிய வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம் †

† இவற்றின் குணம் முறையே, மயக்கம், மௌனம், ஆசை, சித்தாகுலம், சையோக விணக்கம், இவைகொடுக்கும் அவஸ்தை:—சொல்லும் நினைவும் பெருமூச்சுவிட்டு இரங்கலும்; வெறுப்பும் புசிப்பனைவ தெவிட்டலும்; வருத்தமும் பலமொழி பிதற்றலும்; அயர்தலும் மயக்கமும்.

னாலும் ஐந்தில், நீலமலர்களை ஒன்றை தவிர்த்து, முன் நான்கினையும் கரும்புவில்லில் கைக்கொண்டெய்து விட்டான்.

"ஹா! ஆடவரை உலகத்தில் வன்மனதுடைய வரென்றும், இரும்புபோன்ற இறுகிய தேகமுடைய வரென்றும் கூறுகிறார்களே; இவ்விறுக்கங்களினால் யாது பயன்! 'கெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடுகிறது,' பனையின் மந்திரத்தையும் ஒருசாதனை நேரத்தில் பிளக்கவல்ல அப்பு, காற்றில் பறக்கும் பஞ்சுப்பொதியில் இறங்காது. 'பூப் போலென்றால் மிகவும் மிருதுவானதென்று சொல்லுகிறார்கள். அவ்வித மலர் கணையினாலன்றோ மதன் என்னை வாட்டுகிறான். புஷ்பம் போன்ற திரேகமுடைய மாது, தன் கண்விழிகளால் என்னைப் பார்க்கவும் யானதைச் சகிக்கமுடியாதவனாக இருக்கிறேன். இப்படிப்பட்ட சமயத்தில், இறுகியதென்று சொல்லும் ஆடவரின் உள்ளம் வாழைப் பழம்போலும், மலர்போன்ற மிருதுவான ஸ்திரீகளின் பார்வையும், மலர்கணைகளும், வாழைப்பழத்தில் இறங்கும் ஊசிபோலுமிருக்கிறதே. ஹா! வள்ளி நாயகி! நான் உன்னைப்பற்றி சபதம் ஒன்றும் கூறிவிட்டேனே! உன் கடைக்கண்முன் என்சபதம் பஞ்சாய்ப் பறக்கிறதடீ! பஞ்சென்று சொல்லக்கூடாது. 'பஞ்சு' என்று எளிதாகச் சொல்லிவிட்டாலும், பஞ்சானது பாணத்திற்குப் பயப்படுமா? சுந்தர மூர்த்தியானவர், 'பஞ்சின்மெல் லடிப்பாவை மார்குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி' என்று சொல்லியிருக்கிறார். இதை

விட பஞ்சிலும் மிருதுவான காம பாணங்களைச் சகிக்கமுடியாத வன்மையுடைய ஆடவர் நிறைந்த பாண்டிக் கொடுமுடி என்று சொன்னாலும் தகுமே. ஏ மன்மதா! என்னை யிங்ஙனம் வாட்டுகின்றாய்! உன் வரவை எதிர்பார்த்திருப்போரிடம் உன் வல்லமையைக் காட்டக்கூடாதா? உனக்கு வன்மையில்லையென்று நான் சொன்னேனா? யாருமே உன்னால் தம்முடைய பெருமை யிழக்கின்றனரே! நான் அவற்றை இல்லையென்று சொன்னாலன்றோ என்னை அதனின்றும் பொய்யாக்கவேண்டும்? ஏ சந்திரா! உனக்கு இன்னமும் புத்திவரவில்லையா? நீயும் காமனுடன் சேர்ந்து என்னைத் துன்பப் படுத்தவந்தாயோ? அக்காமனாலன்றோ நீ உன் னுடலுங் குறைந்தனை. நீ, உன்னுடலிலுள்ள கறுப்புகளை நீக்கக்கருதாமல் உலகிலுள்ள இருளைநீக்கும் பரோபகாரி என்று சொல்லுகிறார்களே, அப்படியிருக்க என்னிடத்தில்மட்டும் நீ கெட்டவனாக நடந்து கொள்வதற்கு நான் என்ன தகாதகாரியஞ் செய்தேன்? காமனின் ஓர் அம்பிற்குப் பயப்பட்டு அவனுக்குக் குடையாக அமைந்தனையே! இதுவோ உன்வீரம்?

'சுடர்க்கொன் றெழுந்த வெண்டிங்காள்
என்னை சுடுதி ஆரமுதத்
உடனீ பிறந்தாற் கடலின்
தன்மைபுண ராயானாலும்
மடலார் கமலப் பொகுட்டுறையும்
புத்தேள் காணு மறைக் கொழுந்தின்
படர்வார் சடையில் வீற்றிருக்கும்
பான்மையேனு மறிந்திலையே.'

ஆகடலே! சந்திரன் மன்மதனுக்கு குடை பிடிக்கும்பொழுது, நீ அலைகளாகிய முரசை, 'இரதி காதலன் வருகிறு' னென முழக்குகின்றாயே. என்னகன்மத்தினாலிந்த ஜன்மமெடுத்து உன்மத்தம் பிடித்தவனாகிறேன்? தேவேந்திர! நீயே மன்மதனை ஏவினையோ? நான், உன்பதவியையாவது வேறு எதையாவது விரும்புகிறவனல்லவே. என்னை ஏனிப்படி வருத்தவேண்டும்?" எனப்பலவாறு சொல்லி வருந்திக் கொண்டிருந்தான்.

"அதென்னது! நானில்லாத நேரங்களில் இந்தக் கலைமதி எத்தனை மானிடரைத் துன்பத்தி லாழ்த்தி விடுகிறான்?" எனவருந்தினோர்க்கு இதஞ் சொல்லுபவன்போல, சூரியன் சிறிது சிறிதாய் வெளியில் வந்து உருகிநிற்கும் தங்கக்குழம்பே போல் வெளிப்பட்டான்.

மன்னன்மைந்தன் இன்னமும் வருந்தலொழிந்தவனாகக்காணவில்லை. ஸ்ரீசுப்பிரமணியருக்காவது நினைத்தமாத்திரத்தில் உதவியாக ஸ்ரீகணேசப் பெருமான் யானையுருக் கொண்டுவந்தார். ஆனால் இந்த சுப்பிரமணியருக்கு சமயத்தில் உதவியாக வந்தார் ஒருவருமிலர்.

அருணோதயத்திற்குச் சிறிதுபின்னர், ஒருதாதிப் பெண் வந்து, "மஹாராஜா! தங்களைப்பார்க்க வேண்டுமென்று அனந்த ராம ஐயர் வந்திருப்பதாக காவலன் சொன்னான். அத்துடன், தாங்கள் இதுவரை எழுந்து வாராததுபற்றி மஹாராணியவர்கள்

என்னென்று பார்த்து வரச்சொன்னார்கள். கடவுள் தயவினால் நல்லதாகத்தானே?" என்று கேட்டாள்.

சுப்பிரமணியன்:—"எனக்கு ஒன்றும் வித்தியாசமில்லை. இரவில் படுக்க நெடுநேரஞ் சென்றுவிட்டது. அதுதான் எழுந்திருக்க இவ்வளவு நேரம். அனந்தராமனை, புத்தகசாலை அறைக்கு வரச்சொல்."

என்று விடை கொடுத்துத்தான் சிறிது நேரம் கடவுளைப் பிரார்த்தித்து புத்தக சாலைக்குட் சென்றான். அங்கு இவனுக்காக அனந்தராமன் எதிர்பார்த்த வண்ணமிருந்தான்.

சுப்பிரமணியன் :—" அனந்த ராமா? ஏது இவ்வளவு பிந்திவிட்டாய் ? (எனச்சிரிப்பிலேயே வரவேற்பதுபோல் பேசினான்.)

அனந்தராமன் :—(தானும் சிரித்துக்கொண்டு) " இன்று கொஞ்சம் அதிகமாகத்தான் பிந்திவிட்டது. ஆனாலும், நீ இவ்வளவு காலதாமதமாக இது வரை விழித்ததில்லை. ஏது கண்களெல்லாம் சிவந்திருக்கின்றன ? முகமும் வெகு வாட்டமுற்றிருக்கிறது. பின், பிராணநேசா ! உன் உடம்புக்கென்ன ?"

என்று கேட்கவே சுப்பிரமணியன் முகம் பின்னும் வாட்டமுற்றது. ஏக்கத்துட பெருமூச்சு விட்டான்.

அனந்தராமன் :—" என் நேசரத்னமே! என்னிடம் சொல்லக்கூடாதா ? நான் கேட்கவும், பின்னு மதிக வாட்டமுறுகின்றனையே. நாமிருவரும் ஒருவர் மனதை ஒருவரறிந்து அதிலுள்ள இன்ப துன்பங்களை இருவரும் பங்கிட்டு 'ஈருடலும் ஓருயிருமாக'

விருந்தோமே. இன்று,நீ இங்ஙனமிருப்பதைப்பார்க்க —என் நேசா! உனக்குத் தெரியும் என்னியல்பு."

சுப்பிரமணியன்:—உனக்கொழித்து நானொன்று வைத்திருப்பதுண்டா? எல்லாம் காலைக்கடன்களை முடித்தபின்பு இருவரும் பேசிக்கொள்ளலாம். என் உடம்பிற்கொன்றும் வித்தியாசமில்லை. அதைப்பற்றிப் பயப்படாதே."

என, இருவரும் வெளியே புறப்பட்டு ஒரு தோட்டத்தினுட் புகுந்து காலைக்கடன்களை முடித்துக் கொள்ள,

அனந்தராமன்:—"என் தோழா! இன்னமும் உன் முகம் தெளிவடையவில்லையே, யாது காரணம்?"

சுப்பிரமணியன்:—"என் அனந்து! நான் யாரைப் பற்றி ஐந்தாம் திருவிழா வன்று சபதம் கூறினேனே அந்த நபர்தான் என் முகவாட்டத்திற்குக் காரணம்?"

என்று, முன் நாள் நடந்த விஷயங்கள் யாவற்றை யும் புகன்றான். அதன்மேல் மதன் தன்னைவாட்டியதை யும், புகன்று, "என் தோழா! என்னாற் சகிக்க முடிய வில்லையே. என் உடம்பிற்கொன்றும் செய்யவில்லை என்றாலும் என் மனதிற்குள் என்னமோ செய்கிறது. நான் என்னசெய்வேனடா! அனந்தராமா! நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்." என்றான்.

அனந்தராமன்:—"சுப்பிரமண்யா! நான் சொல்லி நீ தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. என் தங்கை சீதாலக்ஷ்மியும், வள்ளிநாயகியும், நம்மிருவரையும் போல் அத்தியந்தநேசிகளென்றுஉனக்குநான் முன்ன

தாகவே சொல்லியிருக்கிறேன். சீதாலக்ஷ்மியாற்றுனே அவர்கள் பள்ளிக்கூடத்திற் கேலியாகப் பேசிக்கொண்டதும், அதற்கு வள்ளிநாயகி சொல்லிய பதிலும் நமக்குத் தெரிந்தது. நீயோ அவசரப்பட்டு, 'அரசர்கள் பரஸ்திரீ கமனர்களென்றும், தன்னைவிடத் தாழ்ந்த குலத்தினரென்றும் சொல்லிய அவளை, இன்னும் ஏழுவருஷங்களுக்குள் அவள் கற்பற்றவளென்றும், பரபுருஷகமனி என்றும் ஊரறியச் சிறை வைக்காவிட்டால் நான் ராஜபுத்திரனல்ல? என்று சபதம் கூறிவிட்டனை. இப்பொழுது நீ அவளை மணந்து கொள்ள விரும்புகிறாய். இதிலெதோ நடப்பது?"

சுப்பிரமணியன்:—சபதங் கூறியதை நிறைவேற்றுவிட்டால் நான் அரசகுலத்திற் பிறந்ததினுலென்ன பயன்? அவளை மணம்புரியாவிட்டாலும் என் உயிர் உடம்பிற் பொருந்தாது. அவள் என் தோளில் காயம் பட்டிருப்பதை பக்கத்தில் நின்றவன் சொல்லக் கேட்டதும், தன் கடைக்கண்ணால் என்னை உற்று நோக்கினுளே அதன் மகிமைதானென்ன? தன் ஆயுளுள்ளமட்டும் மறக்கமாட்டேனென்று சொன்னுளே: செவிக்கின்பமான அவ்வார்த்தையின் அற்புதந்தானென்ன! அடடா! உம்!"

அனந்தராமன்:— "வள்ளிநாயகியோ வைசிய குலத்திலுள்ளவளா யிருக்கிறுள். அவளை நீ மணம் புரிவதென்றால் யாருக்குச் சம்மதமிருக்கும்? எத்தனையோ பெயர் மறுப்பார்கள். முதலில் மஹாராஜாவுக்கும் மஹாராணிக்குந்தான் சம்மத மிருக்குமோ?